மாநகர சபை, யாழ்ப்பாணம்.
பக்கங்கள் : பன்னிரண்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 23 ஞாயிற்றுக்கிழமை (09.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 13

# வடக்கு, கிழக்குக்குத் தனித்தனி இடைக்கால அதிகார சபைகள்

## ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தல் விரைவில்

கொழும்பு,டிசெம்பர்9

வடக்குக்கும் கிழக்குக்கும் தனித்தனியான அதிகார சபைகளை நிறுவுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

உத்தேச நிர்வாக சபைகளுக்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரம் - பொலீஸ் அதிகாரம் வழங்கப்படும்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிக விரைவில் - இந்தியப் பிரதமர் மக்மோகன் சிங் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கைக்கு வருவதற்கு முன்னர் - வெளியிடுவார் என்று தெரியவந்துள்ளது.

வடக்கு அதிகார சபையின் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி நியமிக்கப்படுவார் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சபையின் செயற்பாடுகளில் பிரதான பங்களிப்பார் என்றும் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று ஊகம் வெளியிட்டுள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினை உள்ளடக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்துக்குக் கொண்டுவரப்பட்ட 13ஆவது சட்டத்திருத்தத்தை முழு அளவில் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முடிவு செய்திருப்பதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

13ஆவது சட்டத் திருத்தத்தில் வகை செய்யப்பட்டுள்ள அதிகாரங்களை, முழு அளவில் நடைமுறைப்படுத்த மஹிந்த ராஜபக்ஷ முடிவு செய்திருப்பதாகவும் அது குறித்து விரைவில் அவர் அறிவிப்பார் என்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இலங்கையின் 60ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதியாகும். அன்றைய கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளுமாறு இந்தியப் பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் இனப் பிரச் சினைக்கான உகந்த அரசியல் தீர்வு ஒன்றை அரசாங்கம் முன்வைக்காவிடில் அவர் இலங்கைக்கு விஜயம் செய்யமாட்டார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இப்போது கொழும்பு அரசாங்கத்தின் வசம் உள்ள சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கம்புறுப்பிட்டியில் பெருந் தீவிபத்து

கொழும்பு,டிசெ.9

மாத்தறை நகரில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கம்புறுப்பிட்டியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தர பரீட்சை முடிவுகள் வெளிவருவதில் தாமதம்

கொழும்பு,டிசெ.9

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ஜி.சி.ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க இதனைத் தெரிவித்தார்.

நாளை ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைப் பணிகளில் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதால் இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெதிவித்தார். (அ-1)

## புலிகளுடன் அரசியல் பேச்சுக்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது

### வெளிவிவகார அமைச்சர் சொல்கிறார்

விடுதலைப் புலிகளுடன் அரசியல் பேச்சுவார்த்தையை நடத்தவே அரசு விரும்புகின்றது. போர்நிறுத்தம் தொடர்பாகவோ அன்றி அதுசம்பந்தப்பட்ட வேறு எந்த விடயங்கள் குறித்தோ அல்ல.

வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் 'ஏசியன் ஏஜ்' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கையில் நீண்ட காலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கான அரசியல் பேச்சுவார்தையை விடுதலைப் புலிகளுடன் நடத்த அரசாங்கம் எப்போதும் தயாராகவே உள்ளது.

ஆனால் போர்நிறுத்தம் குறித்தோ அது தொடர்பானவிடயங்கள்குறித்தோ அவர்களுடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமை குறித்து ஆராய ஐ.நா.மனித உரிமை குழு நாளை கூடுகிறது

ஜெனிவா,டிசெ.9

இலங்கையில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுவது குறித்து ஆராய்வதற்காக ஐ.நாவின் மனித உரிமைகள் சபை நாளை ஜெனிவாவில் கூடவுள்ளது. இக்கூட்டத் தொடர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

மனித உரிமை மீறல் சம்பவங்கள் கடந்த சில வாரங்களாக அதிகரித்துள்ளன. நவம்பரில் மட்டும் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். இது தொடர்பாக இக்கூட்டதத்தில் ஆராயப்படவிருக்கின்றது.

இதேவேளை -

இலங்கையில் ஜக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தை நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என இரு மனித

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் முஸ்லிம்களின் காணி சுவீகரிப்பு; கொழும்பில் இன்று எதிர்ப்புக் கூட்டம்

கொழும்பு,டிசெ.9

கிழக்கில் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அரசு சுவீகரிக்கும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தீர்மானத்தை மேற்கொள்வதற்காக முக்கிய கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அரசு சுவீகரித்து வருகின்றது. ஆகையால் அரசுக்கு அளித்துவரும் ஆதரவை விலக்க வேண்டும் என்று கிழக்கு மாகாணத்திலுள்ள பள்ளிவாசல்களின் முகாமைத்துவ குழுக்கள் முஸ்லிம் காங்கிரஸைக் கோரி வருகின்றன.

இது தொடர்பான முக்கிய முடிவை எடுப்பதற்காகவே முஸ்லிம் காங்கிரஸின் உயர் மட்டக் குழு, கிழக்கு பள்ளிவாசல்களின் முகாமைத்துவ குழுக்கள், மௌலவிகள் சபை ஆகியன ஒன்றாகக் கூடி இன்று ஆராயவுள்ளன.

முஸ்லிம் மக்களின் காணிகளை சுவீகரிப்பதை அரசாங்கம் நிறுத்தாவிடில் அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்க வேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப்பீடத்திடம் சம்பந்தப்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாந்தை - அடம்பன் பகுதிகளில் புலிகள் - இராணுவம் கடும் மோதல்

கிளிநொச்சி,டிசெ.9

மன்னார் மாந்தையில் இருந்து அடம்பன் நோக்கி நேற்றுக் காலை முன்னேறிய படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்றன.

முன்னேறிய படையிருடன் ஆறு மணி நேரம் இடம்பெற்ற மோதலின் பின்னர் படையினர் பலத்த இழப்புக்களுடன் அவர்களின் நிலைக்கு திரும்பினர்என்று விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதலுடன் முன்னேறிய படையினரை வழிமறித்து நடத்திய தாக்குதல் காரணமாக அவர்களது நகர்வு முயற்சி முறியடிக்கப்பட்டது என்றும் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்

நேற்றுக்காலை 8.30 மணியளவில் அடம்பன் பகுதியில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் அவர்களின் இரு உறுப்பினர்களை இராணுவத்தினர் கொன்றதாக பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

படையினர் விடுதலைப் புலிகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான வேண்டுகோள்

எமது அன்பான வாடிக்கையாளர்களே, நண்பர்களே, அன்பர்களே! எமது நிறுவனம் எதிர்பாராத துரதிஸ்டவிதமாக 01.12.2007 சனிக்கிழமை இரவு தீயினால் எரிந்து கருகிச் சாம்பலாகிவிட்டது. நாம் மிகவும் வேதனையில் உள்ளோம். ஆகவே எமது வாடிக்கையாளர்களாகிய நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும்படியும், மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் அதே இடத்தில் எமது நிறுவனம் இயங்கும் என்பதையும் உங்களது கொடுக்கல், வாங்கல்களை நாங்கள் தொடர்ந்து செய்வோம் எனவும் உறுதியளிக்கின்றோம். தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

*"நாம் உதிரவில்லை உடைந்து போயுள்ளோம்"*
*"உங்கள் ஆதரவே எங்களின் பலம்"*

**அவசர அழைப்புக்கு:- 021 - 222 7985**

நிர்வாகம்,
உரிமையாளரும், ஊழியர்களும்.

★ *தீயை அணைக்கும் முயற்சியில் தீயுடன் போராடிய எனது ஊழியர்களுக்கும் அவர்களுடன் இணைந்து போராடிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் என் இதயம் உருகிய நன்றிகள்.*

நிஷானந்தா ஜுவெல்லறி,
75 (121), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்புடன் A.ஆனந்தன்
(உரிமையாளர்).

(68745)

## வல்வையில் இன்று இரத்ததான முகாம்

வல்வெட்டித்துறை சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று இரத்ததான முகாம் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் என அதன் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (50)

# விற்பனைக்குண்டு

முட்டை, அப்பிள், கோழி இறைச்சி, வெற்றிலை, பீடி, சிகரட், போட்டோகொப்பி, குடிபான வகைகள், உணவுப் பொருள்கள், வாகன உதிரிப்பாகங்கள், கம்பியூட்டர்கள், கலண்டர்கள் பாடசாலைக் கொப்பி, புத்தகங்கள், உபகர ணங்கள், மின்சார உபகரணங்கள் மற்றும் உங்களுக்குத் தேவையான சகல பொருள் களும் 24 மணி நேரத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
011-4968327, 0773561891

(சி/54660)

# வெளிவந்து விட்டது

**2007 O/L பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்**

ஆசிரியர்- க. யோகேந்திரன்
விலை 25/=

*கிடைக்கும் இடங்கள்*

| | |
|---|---|
| பூபாலசிங்கம் | - யாழ்ப்பாணம் |
| துர்க்கா | - சுன்னாகம் |
| ஐயர்கடை | - சுழிபுரம் |
| நாயகபாலன் | - மானிப்பாய் |
| தங்கமுகம் | - உரும்பிராய் |
| புத்தகக் களஞ்சியம் | - வட்டுக் கோட்டை |
| சிதம்பரப்பிள்ளை | - நெல்லியடி |
| கணன் | - பருத்தித்துறை |
| டிலக்சனா | - உடுவில் |
| கிறிஸ்ரல் சென்ரர் | - நெல்லியடி |

T.P:No-0775133990, 0776913154.

(F/54664)

## S.L.A.S போட்டிப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

**புதிய பிரிவு ஆரம்பம்: 11/12 செவ்வாய் 9 மணி**

*வகுப்புகள் 11,12,13,14,17,18,19,20 ஆகிய திகதிகளில் 9 மணி தொடக்கம் 1 மணி வரை நடைபெறும்*

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக)

(68822)

# HOUSE AND LAND FOR SALE

HOUSE WITH 3 LACHUMS OF LAND IN KUPPILAN SOUTH AND 7 LACHUMS OF LAND IN NORTH KUPPILAN ARE FOR SALE.

**CONTACT**

ILAYATHAMBY - RATNAMMAH.
KERNIYADY, KUPPILAN SOUTH.
TEL: NO- 077-9779718.

(C/54658)

# VACANCIES

Applications are called from the suitable candidates for the following posts:

**01. Coordinator:- Educational Qualifications**

1. G.C.E. (A/L) 3 passes and
2. Diploma in Counselling with 3 years Experience and
3. Knowledge in computer operation (MS Office) and
4. Knowledge in English Language.

**02. Counsellers :-**

1. G.C.E. A/L 3 passes
2. Diploma in counselling with 2 years Experience
3. Knowledge in English Language.

**Please Note.**

a) Closing date for the application will be on 15.12.2007
b) Appointment will be on a contract basis for a period of one year from January 2008 to December 2008.
c) The application of the candidates who do not posses the required qualification and experience will not be considered.
d) Only the short listed candidates will be called for the interview.
e) Canvassing will be treated as a disqualification.
f) Your Bio Data together with copies of the certificates should reach as on or before 15.12.2007.

**Director,**
**C.A.C.P.D,**
**59B, Kandy Road,**
**Chundikuli, Jaffna.**

(68818)

# அனேக பெற்றோர்களின், மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க

**கல்வியாண்டு 2008**
**தரம் 4 முதல் O/L வரை**

**Grade 6,7,8 English Medium**

*தரம் 05* அன்பழகன் ஆசிரியரின் *பரீட்சையுடன் கூடிய விசேட வகுப்புகள்*
*ஆசிரியர்கள்* - செல்வகுமார், A.துவாரகன், K.நந்தன்
*தரம் 9,10,11 விசேட பாடங்கள்*
*ஆங்கில இலக்கியம்* - T.வேலாயுதபிள்ளை
ICT - S.பிரணவன்

| | |
|---|---|
| *முயற்சியாண்மை* / *வணிகக் கல்வி* | - A.வின்சன் |
| *குடியுரிமைக் கல்வி* | - T.திருமுருகன் |
| *புவியியல்* | - K.கிருஸ்ணா |
| *வரலாறு* | - K.ஜெயக்குமார் |
| | - M.பார்த்தீபன் |
| *நாடகம்* | - K.மங்களேஸ் |

(68827)

- ★ ஒவ்வொரு பிரிவிலும் 25 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி.
- ★ கணிதம், விஞ்ஞானம், தமிழ் - வாரத்தில் 5 மணித்தியால வகுப்பு.
- ★ மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை.
- ★ மெல்லக் கற்கும் மாணவருக்கு விசேட கவனம்.

**ஆரம்பம் 10.12.2007 திங்கள்**

| இணுவில் | மானிப்பாய் |
|---|---|
| காலை 8 மணி | மாலை 4 மணி |
| **திகழ் கல்வி நிறுவனம்** | **ஐடியல் இன்ஸ்ரியூட்** |
| K.K.S. வீதி, இணுவில் | ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய். |



## யாழ்.சபரீச ஐயப்பன் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம்

மேற்படி எமது ஆலயத்தில் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இன்று (09.12.2007) ஞாயிற்றுக்கிழமை மகிஷி சம்காரம் (வேட்டைத்திருவிழா) வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது. பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பம். விஷேடமாக குதிரை ஆட்டம், கரகாட்டம், யானை, புலி, சிங்கம், கரடி, குரங்கு ஆட்டங்களும் மகிஷியினுடைய வாள்வீச்சும் விசேட மேளக் கச்சேரியும் இடம்பெற்று 108 சங்காபிஷேகமும் இடம்பெறும்.

10.12.2007 திங்கட்கிழமை மாலை மஞ்சமாதா பூசை, விளக்குப் பூசை என்பனவும் இடம்பெறும்.

11.12.2007 செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தேர் தெரு வீதி வலம் வருதல். ஆலயத்திலிருந்து ஆரம்பித்து இராசபாதையூடாக ஆடியபாதம் வீதியை வந்தடைந்து அதிலிருந்து திருநெல்வேலிச் சந்தியை அடைந்து அங்கிருந்து பலாலி வீதி வழியாக ஆலயத்தை வந்தடையும். இதில் பக்தர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

12.12.2007 புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

கி.அரிகரசுதசர்மா, *ஆலய தேவஸ்தான குருசுவாமி.*

(68824)

# விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொதிகள் யாழ். - கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பிவைக்கப்படும். கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு MOD பெற்று உத்தரவாதத்துடன் அனுப்பிவைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்கள் கொழும்பிலிருந்து பெற்றுத்தரப்படும். பூதவுடல்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டற் செய்து கொடுக்கப்படும்.

**கொழும்பு-யாழ். 1Kg**
**யாழ்.- கொழும்பு 250/=**

**SUB DEALERS தேவை**

## EURO FLIGHT & CARGO (PVT) LTD

35, STATION ROAD, MOUNT LAVINIA, TEL: 0114542190, 0114968327, 077 3846998, FAX: 0114542360 WELLAWATTE BRANCH: 11, VIHARA LANE, COLOMBO - 06, TEL: 0114969116, 077 3561891 JAFFNA BRANCH: 22, WYMEN ROAD, NALLUR, JAFFNA, TEL/FAX: 021 2223974, 0774207963.

(C/54659)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## சின்னையா சிவகரன்

திதி: 09.12.2007

மலர்வு
02 ★ 04 ★ 1980

உதிர்வு
01 ★ 12 ★ 2005

பாச உறவுகளின் உள்ளங்களில்
அணையாத சுடர்விளக்கே!
பாசத்தைப் பகிர்ந்தளித்த பாசமலரே!
உன் உயிரில் ஊறவைத்த
உதிரத் துளிகள் ஒவ்வொன்றும்
பூந்தோட்டத்தில் சிரிக்கும் பூக்களாய்
என்றும் மலர்ந்து கொண்டேயிருக்கும்
ஆண்டிரண்டென்ன ஆயிரம் ஆனாலும்
எம் உள்ளங்களில் உன் நினைவுகள்
வாழ்ந்து கொண்டே இருக்கும்

அளவெட்டி.

குடும்பத்தினர்.

(68743)

# மரண அறிவித்தல்

## *திருமதி இரத்தினம் பூமலர்*



மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, முருகன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பூமலர் நேற்று (08.12.2007) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மகளும் இரத்தினமலர், இரத்தினகுமார் (ஜேர்மனி), இரத்தினசீலன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோகரன் (கனடா), சத்தியவாணி (ஜேர்மனி), துஷ்யா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும் அரவிந்த், அகிலா, மயூரன், ஆரணி, மித்திரன் ஆகியோரின் பாட்டியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சின்னத்துரை, செல்லத்துரை, செந்தாமரை ஆகியோரின் சகோரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகள் இன்று (09.12.2007) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# ஓராண்டு நினைவஞ்சலி

| மண் மகிழ | கண்நெகிழ |
|---|---|
| 05 | 12 |
| 03 | 12 |
| 1944 | 2006 |



எமது குடும்பத் தலைவர்
## அமரர் தர்மலிங்கம் சண்முகநாதன் *(பத்தர்)*

திதி: அமாவாசை

அன்போடும் பண்போடும் எமைக் காத்த அப்பாவே!
கண்களில் நீங்கவில்லை உம் நினைவு
மாய வாழ்வு தனில் ஆண்டொன்று போனதென்ன
ஆறுமோ நம் கவலை இறையடியில்
உங்கள் ஆத்மாவுக்கோர் சிறப்பிடம் அமைய
உயிருள்ளவரை பிரார்த்திப்போமாக
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(68744)

சாரதி வீதி, [illegible],
கொக்குவில்.

உம் நினைவுகளோடு:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## *செல்வராஜா கஜேந்திரன்*

(கஜன் மியூசிக்கல் வேக்ஸ் அன் றெக்கோடிங் பார் உரிமையாளர்)



சங்குவேலி தெற்கு, மானிப்பாயைப் பிறப் பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா கஜேந்திரன் (கஜன்) 06.12.2007 வியா ழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் இந்திராணி தம்பதியினரின் அன்பு மகனும் வக்சலாவின் அன்புக் கணவரும் கஜவர்சனாவின் அன்புத் தகப்பனாரும் கண்ணன், கருணாகரன், கனேந்திரன், கபிலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கவிதா, மாலினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தீபிகன், லக்ஸி, கஜீபன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.12.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சங்குவேலி தெற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்
கண்ணன்.

(68826)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு புலம் பெயர் சட்டத்தரணிகள் சிந்திப்பது எப்போது?

**சர்வதேச மனித உரிமைகள் நாள் நாளையாகும். அதனை யொட்டிய சிந்தனை இது.**

## இலங்கையில் தொடரும் இன ஒதுக்கலை நீண்டு செல்ல விடுவதா........?

டிசெம்பர் 10 மனித உரிமைகள் தினம், உலகெங்கும் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது. இலங்கை உட்பட இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று ஜனநாயகத்தைக் பேணும் ஐரோப்பிய நாடுகள் கூறுகின்றன. இவர்களது கூற்றுப்படி சிங்கப்பூரில் ஜனநாயகம் இல்லையாம். காரணம்: சிங்கப்பூரில் எதிர்க்கட்சி இல்லை. இலங்கையில் ஒழுங்காகத் தேர்தல் நடைபெறுகிறது. ஆகவே இலங்கை ஒரு ஜனநாயக நாடு தான் என்கின்றன ஐரோப்பிய நாடுகள்.

ஜனநாயகத்தைப் பேணும் இலங்கையில் கடந்த 25 ஆண்டு கால உள்நாட்டுப் போரில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையின் படி 1990 ஆம் ஆண்டு வரை இலங்கையில் உள்நாட்டு யுத்தம் காரணமாக 60,000 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை தற்போது ஒரு லட்சத்தை தாண்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனை விட 2,15,000 பேர் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை கூறுகிறது. அத்துடன் கடந்த ஆண்டில் மட்டும் 3,000 பேர் வரை இறந்துள்ளதாகவும் யாழ்ப்பாணத்தில் மட்டும் 2006 நடுப்பகுதி வரை 419 பேர் காணாமல் போயுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது. சிறையில் இருவர் மரணமடைந்துள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம், தீவிரவாதிகளின் கிளர்ச்சி என்பன காரணமாக அனைத்து இன மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். 1971, 1987 ஆகிய காலப் பகுதிகளில் ஜே.வி.பி. கிளர்ச்சி காரணமாக பல ஆயிரக் கணக்கான சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1956, 1958, 1977, 1983 ஆகிய காலப் பகுதிகளில் நடைபெற்ற இனக்கலவரங்களில் பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இலங்கையில் சிறுபான்மையினரான தமிழர்களைப் பாதுகாக்க இலங்கை சுதந்திரமடைந்த பின் பதவி வகித்த எந்த அரசாங்கமும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### சிறுபான்மையினரின் உரிமைகள் சம்பந்தமான ஐ.நா.பிரகடனம்

சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான ஐ.நா. பிரகடனம் கூறுவதைச் சற்றுப் பார்ப்போம். சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான ஐ.நா. பிரகடனத்தின் முதலாவது ஷரத்து பின்வருமாறு கூறுகிறது. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதும் அவற்றை மெய்யாக்குவதும் சமூக வளர்ச்சியின் ஒருங்கிணைந்த அம்சமாகும். ஜனநாயக வரைமுறைச் சட்டங்களுக்குட்பட்டு இவை நிறைவேற்றப்பட வேண்டும். சிறுபான்மையினரை அங்கீகரித்து அவர்களின் தனித்துவத்தைப் பேண வேண்டும். சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான ஐ.நா. பிரகடனம் 1951 இல் அமு லுக்கு வந்தது. இதில் 146 நாடுகள் ஒப்பமிட்டுள்ளன. இலங்கையும் அவற்றில் ஒன்று.

இந்த ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டுள்ள நாடுகள் எல்லா வகையான இன ஒதுக்கலையும் அறவே ஒழிப்பது என உறுதியளித்திருக்கின்றன.

நாட்டில் ஒவ்வொரு சட்டத்தையும் இயற்றும் போதே அதில் ஓட்டையும் உருவாகி வருகிறது என்பார்கள் சட்ட வல்லுநர்கள். அதே போன்றே சிறு பான்மையினரின் உரிமைகள் தொடர்பான ஐ.நா. பிரகடனம் ஒரு தனிப்பட்ட ஐ.நா வின் இன ஒதுக்கல் எதிர்ப் புக் குழுவுக்கு முறைப் பாடு செய்யலாம் என்று கூறுகின்றது. ஆனா லும் சம்பந்தப்பட்ட நாடு முறைப்பாடு செய்பவரின் புகாரை அங்கீகரித்ததாக வேண்டும் எனவும் குறிப்பிட்ட ஐ.நா. பிரக டனம் கூறுகிறது.

### சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு வசதி

இனி இனப் படுகொலைக் குற்றத்தைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான ஒப்பந்தத்தைப் பார்ப்போம். இந்த ஒப்பந்தத்தில் இலங்கை உட்பட 121 நாடுகள் கையொப்பமிட்டுள்ளன. இனப் படுகொலையில் ஈடுபட் டதாகக் குற்றம் சாட்டப்படும் ஒருவரை இனப் படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட நாடுகளின் ஒப்புதலுடன் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கலாம். சர்வதேச சட்டத்தின் படி இனப் படுகொலை கள் போர்க்களத்தில் நிகழ்த்தப்பட்டாலும் அவை மனித குலத்திற்கு எதிரான குற்றமா கவே கருதப்படும்.

### இதுவரை அது குறித்துச் சிந்திக்காதது ஏன்?

இப்படி ஒரு வசதி இருக்கும் போது புலம் பெயர்ந்த தமிழர்கள் அல்லது புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புகள் ஏன் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கைக்கு எதிரான ஒரு வழக்கைத் தாக்கல் செய்ய முயற்சிக்கக் கூடாது? புலம் பெயர்ந்த தமிழர்களால் வெளியிடப்படும் பத்திரிகைகள் சஞ்சிகைகளில் ஏராளமான சட்ட உதவி விளம்பரங்கள் வெளியாகுகின்றன. அந்தச் சட்டத்தரணிகள் யாராவது தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஏன் இந்த முயற்சியில் இறங்கக்கூடாது?

லண்டனில் ஆர்ப்பாட்டம், சுவிஸில் ஊர்வலம், பிரான்சில் கவனஈர்ப்புப் போராட்டம், ஜேர்மனியில் கண்டனக் கூட்டம் என்றெல்லாம் பத்திரிகைகளிலும் இணையத் தளங்களிலும் செய்திகள் வெளிவருகின்றன. இவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்துவோர் சில வேளைகளில் புலி ஆதரவாளர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். இவ்வாறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதோடு நின்றுவிடாது சட்டபூர்வமான உருப்படியான ஒரு காரியத்தில் ஏன் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஈடுபட முயற்சிக்கக்கூடாது? இது குறித்து இவர்கள் இதுவரை அர்த்தபூர்வமாகச் செயற்பட முனையாதிருப்பது ஏன்?

மேலைநாடுகள் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை (Freedom Of Expression) வலியுறுத்துகின்றன. இலங்கையில் தமிழர்களுக்கு வீதியில் நடமாடும் உரிமைகூட மறுக்கப்படுகிறது. கொலைகள், கைதுகள், கடத்தல்கள், காணாமல்போதல் போன்ற விடயங்கள் ஒரு புறம், மறுபுறத்தில் வீதியைக் கடக்கும் உரிமைகூட யாழ். மக்களுக்கு மறுக்கப்படுகிறது. இந்த அடிப்படை மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு ஒரே வழி சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது தான். ஆனால் யார் இதைச் செய்யப்போகிறார்கள்?

### யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள்

மேலும் யாழ்ப்பாணத்திலும் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படவுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வெளி வந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் தினம் கொண்டாடுவோர் எந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஐ.நா.செயலாளர் நாயகம் பாங்கி மூனைப் பயங்கரவாதி என்று சொல்லும் அமைச்சர்கள் உள்ள நாட்டில், உலக வல்லரசான அமெரிக்காவின் தூதுவர் றொபேட் ஓபிளேக்கை வாகனத்தை விட்டுவிட்டு இறங்கி நடந்து போ என்று உத்தரவிடும் அதிகாரிகள் உள்ள நாட்டில் மனித உரிமைகள் தினம் அதுவும் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவுள்ளது என்பது ஒரு வகையில் நையாண்டிற்கு உரியதாகிறது அல்லவா? மனித உரிமைகள் தினக்கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்தோருக்கு ஒரு விடயம் தெரியுமோ என்னவோ? உலகில் அதிகளவில் சித்திரவதைகள் இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு இரண்டாவது இடம் கிடைத்துள்ளது. மனித உரிமைகளை விட நாட்டின் பாதுகாப்புத்தான் முக்கியம் என்று கூறும் பிரதமர் பதவி வகிக்கும் ஒரு நாட்டில் மனித உரிமைகள் தினமா? ஒரு நாட் டில் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது என்றால் அந்த நாட்டில் மனித உரிமைகள் பேணப்படுகின்றன, மதிக்கப்படுகின்றன என்று தானே அர்த்தம்?

வீதியில் நடமாடும் உரிமைகூட மறுக்கப்படும் ஒரு நாட்டில் மனித உரிமைகள் தினக் கொண்டாட்டமா? உலகில் மனித உரிமைகளைப் பேணும் நாடுகள் வரிசையில் சுவீடன், டென்மார்க், பின்லாந்து, நெதர்லாந்து, ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் முதலிடம் பெற்றுள்ளன.

ஒரு பிரஜைதான் நினைத்தபோது விரும்பிய இடத்திற்குச் சென்று தனது அன்றாடக் கருமங்களை நிறைவேற்ற முடியாத ஒரு பிரதேசத்தில் அச்சமின்றி அதன் சுதந்திரமாக மண்ணில் நடமுடியாத ஒரு வாழ்விடத்தில் மனித உரிமைகள் தினம் கொண்டாடுபவர்கள் எந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்றே கேட்க வேண்டியுள்ளது.

கொழும்பில் மனித உரிமைகள் தினத்தன்று கோட்டை ரயில் நிலையம் முன்பாக காணாமல் போனோரின் பெற்றோர், உறவினர்கள் ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளமையும் உற்றுக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றல்லவா?

**வியாபகன்**

---

# தமிழர்களை கொழும்பில் கைதுசெய்ததன் பின்னர் அரசு இப்போது தடுமாற்றத்தில்!

## கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பது நாடாளுமன்றில் அரங்கேறியுள்ளது

தலைநகரில் தமிழ் மக்களின் கைது மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு ஒரு பெரும் தடுமாற்றமான நிலையை ஏற்படுத்திவிட்டுள்ளது. ஆனாலும் கீழே வீழ்ந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போன்று காட்டிக் கொள்கிறது அரசு. உண்மை நிலை அதுவல்ல.

இரு வாரங்களின் முன் அதாவது நவம்பர் 28 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவின் அலுவலகத்திலும் அதேதினம் மாலை நுகேகொடையிலும் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து தலைநகர் கொழும்பிலும் சுற்றுப்புற நகர்களிலும் தமிழ் மக்கள் வகை தொகையின்றி கைது செய்யப்பட்டு ஆடு, மாடுகளைப் போல் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.



வயோதிபர்கள், நோயாளிகள், பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள், பாலூட்டும் தாய்மார்-குழந்தைகளுடன் வயது வித்தியாசமின்றி - பால் வித்தியாசமின்றி கைது செய்யப்பட்டுள்ளனர்.

வழமையாக தென்னிலங்கையில் எங்காவது ஒரு மூலையில் குண்டுவெடித்துவிட்டாலோ பிரமுகர் ஒருவர் கொல்லப்பட்டாலோ கேட்டுக்கேள்வியின்றி தமிழர்கள் கைது செய்யப்படுவதும் தடுத்து வைக்கப்படுவதும் பழக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது.

இப்படியான கைதுகள் இடம்பெறும் போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிலும் இன உணர்வு உள்ளவர்கள் மட்டும் ஆட்சேபமும் கண்டனமும் வெளியிடுவர்.

ஆனால் இம்முறை அப்படியாகிவிடவில்லை. மூன்று தினங்களில் ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கைது செய்து பாதுகாப்புத் தரப்பினர் நடத்திய வெறித் தாண்டவத்திற்கு இனவெறி பிடித்த ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஸ்ரீல.சு.கட்சி உறுப்பினர்களைத் தவிர அனைத்துக் கட்சிகளும் ஆட்சேபித்துள்ளன.

இதுவரை காலமும் இனவாதத்தைக் கக்கிய ஜே.வி.பியுடன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து பாதுகாப்புத் தரப்பினரின் வெறித் தாண்டவத்திற்கு எதிராக கடந்த 3ஆம் திகதி நாடாளுமன்றில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தன.

அவை இந்த இன ஒதுக்கல் நடவடிக்கையினைக் கண்டித்து, தமிழ் மக்கள் கைது செய்யப்படுவதை வன்மையாகக் கண்டித்தன.

### எதிர்க்கட்சிகள் அனைத்தும் தமிழருக்காகக் குரல் கொடுத்தன

நாடாளுமன்றில் உள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆளும் தரப்பில் உள்ள மலையக மக்கள் முன்னணியும் முன் எப்போதும் இல்லாத வகையில் ஒன்றுபட்டு தமிழர்களுக்காகக் குரல் எழுப்பின.

ஆளும் அரசுக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டு அமைச்சுப் பதவிகளை சன்மானமாகப் பெற்றுக் கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீல.மு.காங்கிரஸ் என்பன இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவில்லை என்பது சுட்டிக்காட்டப்படவேண்டிய ஒன்று.

**இரா.புத்திரசிகாமணி**

நாடாளுமன்றில் இடம்பெற்ற எதிர்ப்பு நடவடிக்கைகளில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்றத்திற்கு வெளியே தனிப்பட்ட முறையில் நேரடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்து தமது ஆட்சேபத்தைத் தெரிவித்ததுடன் கைதுகளை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவையும் தாக்கல் செய்து தனக்குச் சமூகப் பற்றும் இன உணர்வும் உண்டு என்று காட்டிக்கொண்டது.

ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு முஸ்லிம் உறுப்பினரும் தமிழ் மக்களின் கைது தொடர்பாக இதுவரை ஒரு வார்த்தை தானும் வெளிப்படுத்தாததும் அவதானிக்கப்படவேண்டியது மட்டுமல்ல கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகிவிட்டது.

என்றுமே இல்லாதவாறு தென்னிலங்கை சிங்களக் கட்சிகளும் தமிழர்களின் கைது தொடர்பாக ஆட்சேபனையைக் கிளப்பியது ராஜபக்ஷ அரசுக்குப் பெரும் தலையிடியாக மட்டுமன்றி தடுமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னைச் சந்தித்த தமிழ் அரசியல்வாதிகளிடம் தமிழ் மக்களை விடுதலை செய்ய உத்தரவிடுவதாக உறுதி வழங்கியிருந்தார்.

### ஓங்கிநிற்கும் கோத்தபாயவின் குரல்

ஆனால் அவரது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய என்னவென்றால் எவரையும் விட்டு வைக்காமல் பூஸாவில் அடையுங்கள் என்று உத்தரவிடுகின்றார். இங்கே ஜனாதிபதியை விட தம்பியார் கோத்தபாயவின் குரல்தான்

(11ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES

### CUSTOMER SUPPORT TECHNICIANS

Manager "EWIS Systems Jaffna (PVT) Ltd" invites applications for the above post.

Qualification

a. With A/L
b. Diploma in Computer Hardware Engineering
c. Should have sound knowledge in computer assembly, trouble shooting, networking along with experience of at least two years.

Age not more than 35 years.
Should possess a motor cycle with valid driving license.
Send your CV by post to reach me within ten days of this advertisement.
Only short listed applicants will be called.

**Manager,**
EWIS Systems Jaffna (Pvt.) Ltd.
173, Vembady Road,
Jaffna.

(68726)

## Hatton National Bank

### அடகுப் பொருள்களை ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 30.09.2006 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுநகைகள் 15.12.2007 சனிக்கிழமை அன்று இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்.....**

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீளஅடகுவைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனை திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி/54641) -ஹற்றன் நஷனல் வங்கி.

## யாழ் மண்ணில் மீண்டும் புதுப்பொலிவுடன்

❊ இந்திய சமையல் வல்லுனர்களின்கைவண்ணத்தில்
❊ அறுசுவை உணவுகளை உயர்ந்த தரத்துடன்
❊ உங்கள் நாவுக்கு விரும்பிய இனிய சுவையுடன்




**உண்டு மகிழ்ந்திட உடனே நாடுங்கள்**

No.15, Sirambiyady Lane, Jaffna.
T.P.No 021-2225899/7100

## நினைவலைகள்

9 ஆம் ஆண்டு — 15 ஆம் ஆண்டு



மலர்வு 19 . 05 . 1922 — உதிர்வு 04 . 11 . 1998

அமரர் அருளப்பு



மலர்வு 22 . 10 . 1929 — உதிர்வு 06 . 12 . 1992

திருமதி திரேசம்மா

மாரீசன் பதியின் உத்தம சீலர்களே!
எத்தனை ஆண்டுகள்தான் கடந்தாலும்
உங்கள் நினைவுகளில் கரைகின்றோம்
நீவீர் பெற்றெடுத்த கண்மணிகள்
உங்களை மறக்கவும் முடியாமல்
காலங்கடந்த நினைவுகளுடன் காத்திருக்க
மீண்டும் ஒருமுறை உங்கள் நினைவுகளுடன்
உறைகின்றோம்.

மாரீசன்கூடல்,
இளவாலை. (சி/54637) குடும்பத்தினர்.

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.9

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

விரைவில் இடம் பெறவுள்ள தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பாக கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதால், சகல தொண்டர் ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## திறப்பு விழா

வலி.தென்மேற்கு, டிசெ.9

பிரான்பற்று உப தபால் அலுவலக திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரான்பற்று மக்கள் நலன் புரிச்சங்க தலைவர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வட மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வீ.குமாரவேல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக அலுவலகத்தைத் திறந்து வைப்பார். (202-135)

## செயலமர்வுகள்

நெல்லியடி, டிசெ.9

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தால் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் நிலையத்தில் மனைப் பொருளியல் செயலமர்வு நடத்தப்படவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார். (202-115)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 1, தரம் 2 ஆகியவற்றின் வகுப்பாசிரியர்களுக்கான செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலபாட செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

தரம்-1 வகுப்பாசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 13 ஆம் திகதியும் தரம்-2 வகுப்பாசிரியர்களுக்கான செயலமர்வு 14 ஆம் திகதியும் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறும் என வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (202-207)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.9

கிராமிய மட்டத் தலைவர்களை உருவாக்குவதற்கான தலைமைத்துவ பயிற்சி உள்ளூராட்சி சபைகள் ஊடாக நடைபெற்று வருகின்றன.

முதற்கட்டமாக யாழ்.மாநகரசபை, 7 பிரதேசசபை உட்பட 8 உள்ளூராட்சி சபையூடாக கிராமியமட்டப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சி நெறிக்கு உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களின் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்விற்கு உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக அபிவிருத்தி அதிகாரிகளான செ.தவநாயகம், வெ.சுப்பிரமணியம், வே.கந்தசாமி, த.கிருபாகரன் ஆகியோரும்-

யாழ்.மாநகரசபை தொழில்நுட்ப அதிகாரி செ.சிவப்பிரகாசம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் ஆகியோர் துறைசார்ந்த விரிவுரையாற்றவுள்ளனர். (202-95)

## மணமகள் தேவை

யாழ்.இந்து வேளாள குடும்பம் கனடா P.R., 1973 இல் பிறந்த, லக்கினத்தில் செவ்வாய், உத்தரட்டாதி நட்சத்திர மணமகனுக்கு படித்த மெல்லிய சிவந்த மணப்பெண் தேவை. பாதம் முழு விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

விளம்பர இல. 3035, மே/பா. உதயன்.

## இதய அஞ்சலி



யாழ்.செயலக பதிவாளர் பணிமனையில் கடமையாற்றி வருபவரான மனோகரியின் தாய் திருமதி பொன்னம்மா சுந்தரம்பிள்ளை அவர்களின் மறைவையிட்டு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி [illegible],
பதிவாளர், வேலணை.

(68803)

## திருமண சேவை T.P.: 0775834982

**சிவாலயா சர்வதேச திருமணசேவை (SIMB)**
Shivaalaya International Marriage Bureau (Govt. Regd No.779)
389c Ramalingam Road, Thir unelvely East, Jaffna, Srilanka.

சிவாலயாவின் பக்தி வணக்கம்!

எனது இனிய சொந்தங்களே! உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வாழும் மணமக்களுக்கு தகுந்த வரன்களைத் தேடுகிறீர்களா? செவ்வாய் தோஷம், நாகதோஷம், சூரியன் செவ்வாய் சேர்க்கை, தகுந்தகல்வி, உத்தியோகம், அழகு, சீதனம், [illegible] இவ்வளவு விடயங்களையும் சந்திக்க வேண்டியுள்ளதென யோசிக்கிறீர்களா? கவலையை விடுங்கள். சிவாலயா உங்களின் உறவுப்பாலமாக இருந்து தங்கள் எதிர்பார்ப்பிற்கேற்ப மணமக்களை தேர்ந்தெடுத்து கொடுப்பதில் தன்னிறைவு பெற்றுள்ளார்கள். ஆகவே அனைத்துச் சமூகத்தவர்களும் [illegible]. தங்கள் விபரங்களுடன் தபால் மூலமாக தொடர்பு கொள்ளுங்கள். மக்கள் சேவை சிவாலயாவின் சமத்துவசேவை.

இவண்
சபாபதி கதிரவேலு சிவகரன்
(அமைப்பாளர், ஆலோசகர்).

(68745)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 14 . 08 . 1942 — விண்ணுலகில் 20 . 11 . 2006

**திருமதி மனோன்மணி துரைராசா**

திதி: கார்த்திகை அமாவாசை (09.12.2007)

அன்பாலும் பாசத்தாலும் கூடிக்குலாவிய தாய்மனை
அன்னையின் அரவணைப்பை இழந்து தவிக்கிறது
ஆண்டு ஒன்று ஆகிவிட்டதம்மா!
ஆறாது துயர் எம் ஆயுள் உள்ளவரை.
ஓம் சாந்தி!

(68744)

குமரகோட்டம், கோண்டாவில். குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 10 . 08 . 1958 — மறைவு 08 . 11 . 2007

**அமரர் செல்லத்துரை அருள்தாஸ்**

அருள்தாஸ் எனும் நாமம் காதோடு ஒலிக்கிறது
அப்பா உங்கள் அன்பு முகம் கண் காணத் துடிக்கிறது
உம் அன்பு மனையாள் உம் பிரிவை தாங்கொணாது
கதறியழ முடியாது மௌனக் கண்ணீர் வடித்திருக்க
உம் அன்பு மகளின் பாசக்கயிறு அறுந்து நிற்க
அன்பு மைந்தனிருவருமோ அப்பா போன வழி தெரியாது
பாடப்புத்தகத்தில் பாச முகம் தேடி நிற்க
எங்கு தான் சென்றீர்கள்?

இவரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலித் திருப்பலி நாளை (10.12.2007) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு புனித [illegible] ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

போயிட்டி, இளவாலை. (சி/54638) மனைவி, பிள்ளைகள்.

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் முருகேசு வல்லிபுரம்**

திதி: 09.12.2007

தோற்றம் 12 ★ 12 ★ 1915 — மறைவு 29 ★ 11 ★ 1997

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே - ஐயா!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறவில்லை எம் துயரம்
எங்கள் உயிர் இருக்கும் மட்டும் உங்கள் நினைவிருக்கும்...

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்பு
உள்ளங்கள்:

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரி, மைத்துனர், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

ஆடுவான் தோட்டம்,
அல்வாய்கிழக்கு.

(68709)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றைய தமிழ் நடைக்கு ஒரு மாதிரி

சிவத்தமிழ் வித்தகர், கலாநிதி, மூதறிஞர், பண்டிதமணி க.வைத்தீசுவரக் குருக்கள் 1916இல் காரைநகர், ஈழத்துச் சிதம்பரத்தில் பிறந்தவர். தற்சமயம் கந்தரோடையில் வாழ்ந்து வருகிறார். இவர் பல நூல்களை ஆக்கியும் வேறு பல நூல்களைப் பதிப்பித்துமுள்ளார். பதிப்பித்த நூல்களில் சிறப்பிடம் பெற்றது 'ஈழத்துச் சிதம்பர புராணம்'. அதனை ஆக்கியவர் அமரர் நவாலியூர் புலவர்மணி சோ.இளமுருகனார். வைத்தீசுவரக் குருக்கள் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் மிகவும் சிறந்த முடிப்பினையுடையது என்ற வகையில் முதலாவதாகத் தெரிந்தெடுக்கப்பட்டு (1972 ஆம் ஆண்டு) இலங்கைத் தேசிய நூல் அபிவிருத்திச் சபையினால் தகைமைச் சான்றிதழ் வழங்கப்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.


இளமுருகனார்

அதனையொட்டி அவ்வமயம் புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்கள் வைத்தீசுவரக் குருக்களுக்கு எழுதிய திருமுகம் இது. அன்று வழக்கில் இருந்த தமிழ் உரை நடையை புலவர் மணியின் திருமுகம் பிரதிபலிக்கிறது. இன்றைய உரைநடைக்கும் அதற்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு உதவும்.


வைத்தீசுவரக் குருக்கள்

## இருபெரும் சான்றோர்களுக்கிடையில் ...

91 வயதான தேறிஞர் தமது தள்ளாத வயதிலும் நூல்களைப் படிப்பதிலும் பயனுள்ள விடயங்களை எழுதுவதிலும் ஈடுபட்டு வருகிறார்.

இரண்டு மூத்த தலைமுறையினரை அறிமுகம் செய்கிறது இந்தத் திருமுகம்.

புலவர்மணி சோ.இளமுருகனார் அவர்கள் சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்கள் அவர்களுக்கு எழுதிய திருமுகம்.

உ
சிவமயம்

நவாலி,
மானிப்பாய்
29.12.71

பேரன்பு சான்ற அந்தணர் பெருந்தகை பண்டிதர் சிவத்திரு வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்களின் திருவடிக் கமலங்களைத் தலைமிசைச் சூடிக் கொண்டு எழுதும் திருமுகம்.

ஈழத்துச் சிதம்பர புராணத்தை எழுதுவித்ததற்கு நீங்கள் எடுத்த முயற்சியிலும், அதனை அழகுற அச்சிடுதற்கு எடுத்த முயற்சி பலநூறு கோடி பெரிது. அதனைக் காட்டிலும் எம்மை விளம்பரஞ் செய்ய ஓராண்டுக்காலமாய் எடுத்த முயற்சி ஆயிர கோடி பெரிது. அதனைக் காட்டிலும் பாராட்டு விழாவெடுத்ததற்கு பலதிங்கள் எடுத்த முயற்சி பத்தாயிர கோடி பெரிது. இத்தனைக்கும் ஒன்றுக்கும் பற்றாத சிறியேம் என்ன கைம்மாறு செய்யப்போகின்றோமோவென்று அஞ்சுகின்றேம்! பெரியசாதனை! அறிவும் சாதுரியமும் ஆற்றலும் உடையவர்கள் இவ்வுலகில் எல்லாஞ் செய்வர் என்பதையே தங்களிடம் இருந்து படித்துக் கொண்டோம்.

நரம்புத் தளர்ச்சியோடு மனந்தளராது இருந்து ஒரு சதத்திலிருந்து 15 ஆயிரம் ரூபா தொகுத்து ஒரு நூலை அச்சிட்டு வெளிப்படுத்திய பெருமை தங்களுக்கே உரிமையானது. இந்தச் சாதனையை யாருஞ் செய்யமாட்டார். அரிய சாதனை! வானந் துளங்கினும் துளங்காத நெஞ்சம். தங்கள் நெஞ்சத்துணிவையும், பொறுமையையும், பொறுமை இழக்காது அன்போடு சாதுரியமாய் ஒரு கருமத்தை நிறைவேற்றும் பேராற்றலையும் பெற்றவர் நீங்கள் ஒருவரேயாவீர்கள்.


இனிச் சில காலம் ஆறுதலாக இருங்கள். 1000 பிரதிகளையும் விலையாக்க முயலுங்கள். அப்போது உங்கள் கடன் தொல்லைகள் எல்லாம் நீங்கிவிடும்.

நீங்கியபின்பு - ஆறுதலாக இரண்டாம் பதிப்பைப் போடத் தொடங்குவோம். அது நிறைவேற வேண்டும்.

புல்லியே முக்கு இத்துணைப் பாராட்டா? என்று இடையிடையே நினைத்து திடுக்கிடுகின்றோம்.

திருவடிகட்கு வணக்கம்
சோ.இளமுருகனார்.

புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்கள் சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களுக்கு எழுதிய திருமுகம்.


29.12.71

உதவி: பொ.சண்முகநாதன்

# யாராகப் பிறப்பார்?

மார்கழித் திங்கள் பிறந்ததும் கிறிஸ்தவர்களின் திருவழிபாட்டு நாள்காட்டியில திருவருகைக் காலம குறிக்கப்பட்டுவிடும்.

அதாவது. கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு ஆயத்த காலம் - திருவருகைக் காலம். ஆயி னும், பின்னுக்கு வந்தவன், முந்தி அடித்துக கொண்டு முன்னுக்குச் சென்றவனை ஒதுக்கி விடுவதுபோல, பின்வர வரும் "நத்தார்" விழாக கொண்டாட்ட ஆயத்தங்கள் இந்தத் திருவருகைக் காலத்தை ஒதுக்கி விடுகின்றது. இது. அண்மைக்கால வரலாறு.

இம்முறையும் நாம் "நத்தார்" விழா புறக கொண்டாட்டங்களைத தவிர்ப்பதால் இந்தத் திருவருகைக் காலத்தில் சிந்திப்போம்.... செபிப்போம்.....

கிறிஸ்து பிறப்பு விழா: திருவருகைக் காலம்: இந்த "நத்தாரு"க்கு கிறிஸ்து இங்கு வருவாரா? பிறப்பாரா? கடந்த இருபத்து



ஞாயிறு தற்பிரதசாதம்

நான்கு ஆண்டுகளாக நாம் அனுபவித்து வரும் சாவுகள், கொலைகள், இழப்புகள் பல்வேறுபட்ட நோவுகளில் கிறிஸ்து பிறந்தாரா?

### வரலாற்றின் ஊடாக...

இரண்டாயிரம் ஆண்டுகள் பின்னோக்கி வரலாற்றை உற்றுநோக்குவோமாயின் ஓர் அதிர்ச்சிதரும் உண்மை வெளித் தோனறுகின்றது. அதாவது, எப்படிப்பட்ட அரசியல் - சமூக – மதச் சூழலில் இயேசு பிறந்தார். அன்று இஸ்ராயேல் மக்கள் ஓர் அன்னிய ஆட்சியின் கீழ் அடிமை நிலையில் வாழ்ந்தார்கள். இந்த அடிமைத் தளையில் இருந்து விடுதலை பெற இஸ்ராயேல் சமூகத்தில் சில குழுக்கள் இயங்கின. பரிசேயர், சதுசேயர், தலைமைக் குருக்கள் என்றும் "பெரியோர்"கள் கட்சி சேர்த்தனர். இவர்கள் அனைவரும் எந்தப் பக்கம் சார்ந்து தம்மை வளர்த்துக் கொண்டார்கள்?

### சூழல்

இப்படிப்பட்ட ஓர் சூழலில்தான் கிறிஸ்து இஸ்ராயேல் சமூகத்தில் பிறந்தார். வளர்ந்தார். தனது மக்களின் அரசியல் சமூக, மத அடிமைச் சூழலை உய்த்துணர்ந்தார். வனாந்திரம் சென்று செபித்தார். மனந் திரும்பினார். "இறைவன் ஒருவனே" என்று முடிவுசெய்தார். தனது இலட்சியத்தை தெளிவாக்கி வெளிப்படுத்தினார். மக்களுக்காகக் குரல் கொடுத்தார். மக்களின் முழுமையான விடுதலைக்கு வழிவகுத்தார்.

விளைவு: சாவு. கொலை. யார் அவரைக் கொலை செய்தார்கள்? யார், யார் பக்கம் சேர்ந்தார்கள்?

இன்று அதே நிலைப்பாடு. கிறிஸ்து மீண்டும் வருவாரா? மீண்டும் பிறப்பாரா? எங்கள் மனித முழுமையான விடுதலைக்குக் குரல் கொடுப்பாரா?

அன்று... அவர் கொல்லப்பட்டது உண்மை. ஆனால், அவரது இலட்சியத்தை, விடுதலை வேட்கையை, மக்களை இறைவனபால் மனந்திருப்ப வேண்டுமென்ற அவரது இலக்கை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழையடி வாழையாக ஆயர்கள். குருக்கள், துறவிகள், கிறிஸ்தவ மக்கள் நிலைநாட்டியே வருகிறார்கள். இயேசு உயிர்த்து நம்மிடையே வாழ்கின்றார்.

நாம் இன்னமும் அவரை அடையாளம் காணவில்லையா? சில தியாகிகள் வடிவில் இயேசு பிறந் திருக்கிறார். இத் தியாகிகள் சிலர் கொலையுண்டிருக்கிறார்கள்.

மைக்கேல் றொட்றிக்கோ, அபா கொஸ்ரா, சந்திரா பர்னாந்து, மேரி பஸ்ரியன், ஜிம்பிறவுண், பாக்கியரஞ்சித் போன்றவர்கள் இந்நேரம ஞாபகத்துக்கு வருகிறார்கள். எனக்கு நம்பிக்கையுண்டு.

ஆனால், எந்த இஸ்ராயேல் மக்களுக்காக இயேசு உயிர் கொடுத்தாரோ (வரலாற்று வழிநின்று பார்க்கும்பொழுது) அதே இஸ்ராயேல் மக்கள் இன்று அரசியல் - சமூக - புறமத சுதந்திரம் பெற்றாலும், விடுதலை பெறவில்லையே.

இன்று அவர்கள் பலஸ்தீன மக்களை அடிமைப்படுத்தி வரு கிறார்களே! ஆன்மீக விடுதலை அவர்கள் பெறவில்லையே!

இன்று... இயேசு பிறப்பாரானால் யாராகப் பிறப்பார்? பலஸ்தீனனாகவே பிறப்பார் என்று நான் துணிகின்றேன். ஆனால் யார் அவரைக் கொல்வார்கள்?

இயேசு இன்று நம்மிடையே பிறப்பாரானால், யாராகப் பிறப்பார்? எப்பொழுது பிறப்பார்? யார் அவரைக் கொல்வார்கள்? யார், யார் பக்கம் சாய்வார்கள்?

இதுபற்றிச் சிந்திக்க நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம். ✱

# மழை வேண்டி இப்படியும் வழிபாடு

மழை பெய்யவேண்டும் என்பதற்காக வயதான பெண்கள் கிராமத்தை விட்டு வெளியேறிய நிகழ்வு ஒன்று சென்னை உடுமலை அருகே உள்ள கிராமத்தில் நடந்தது.

உடுமலை அருகேயுள்ள கணபதி பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் 10 இற்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள் ளன. இங்கு 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் விவசாயத்தையே நம்பி உள்ளனர்.

இந்த ஆண்டு பருவமழை இப்பகுதியில் சொற்ப அளவே பெய்தது. இதனால் ஏமாற்றமடைந்த மக்கள் மழை வேண்டி பரிகாரங்கள் செய்ய முடிவுசெய்தனர். ஊர் நுழைவு வாயிலில் உள்ள விநாயகர் கோயிலில் அனைவரும் சேர்ந்து பொங்கல் வைத்து வழிபடுவது என முடிவுசெய்தனர். அதன்படி பொங்கலிடும் நிகழ்ச்சி நடந்தது.

ஏராளமான பெண்கள் இதில் கலந்து கொண்டனர். பின்னர் வயதான பெண்கள் ஊரைவிட்டு வெளியேறும் நிகழ்ச்சி நடந்தது. இரவு 9 மணிக்குப் பிறகு இங்குள்ள மூதாட்டிகள் வீடு வீடாகச் சென்று இராப்பிச்சை வாங்கினர்.

அதன் பின் ஊரை விட்டு வெளியேறி, காட்டுப் பகுதியில் சென்று அமர்ந்தனர். ஒருநாள் கழித்து கிராம மக்கள் அனைவரும் திரண்டு சென்று அவர்களை சமாதானம் செய்து மீண்டும் ஊருக்குள் அழைத்து வந்தனர். இவ்வாறு செய்தால் மழை வரும் என்பது அந்தக் கிராம மக்களின் நம்பிக்கையாம்!

லிங்கொல்ன் கல்லூரி
மலேசியா
www.lincoln.edu.my E-mail: info@lincoln.edu.my

நேர்ஸிங் – தாதியியல்
ஹொட்டலும் ஹொட்டறிங்கும்
பொறியியல் (இலத்திரனியலும், இலத்திரனியல் சாதனங்களும்)
கம்பியூட்டர் புறோக்கிராமிங்
வணிக நிர்வாகம்
மல்ரி மீடியா

மலேசியா

அவுஸ்திரேலியா
இங்கிலாந்து
அமெரிக்கா
நியூசிலாந்து
ஐரோப்பிய நாடுகள்
கனடா

உங்கள் தகைமைக்கேற்ற புலமைப்பரிசில் வழங்கப்படும்

✱ தங்குமிட வசதியுடன் உள்ளடக்கப்பட்ட மிகக் குறைந்த கல்விக் கட்டணம்.
✱ சகல வசதிகளையும் கொண்ட மேல்நாட்டு நாகரீக குடியிருப்புக்கள்.
✱ பகுதிநேர வேலைவாய்ப்புக்கள். IELTS,TOFEL தேவையில்லை.
✱ VISA பெறுவதற்கு நேர்முக பரீட்சை தேவையில்லை.

அனுமதிக்கான குறைந்தபட்ச தகுதி
க.பொ.த.(சாதாரணதரம்)

ஆலோசனைக் காரியாலயம் :
LINCOLN COLLEGE STUDENT COUNCIL,
NO. 399, 2nd FLOOR GALLE ROAD, COLOMBO 04.
(வோல்வோ கம்பனிக்கு முன்னால்)
TEL/FAX : 0112 552564, 0773 441523,
உயர் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றது :
KP(JPS) 5195 / IPTS/ 1222JLD 11 (4)

இலவச விரிவுரை வகுப்புக்கள்
யாழ்ப்பாண ஏஜென்ற்:
எஸ்.சிவகிரிபன்,
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
தொடர்பு:- 077 5212703

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகம் தரும் இயற்கை வைத்தியம் (இயன் மருத்துவம்)

✱ பல மருந்துகளினால் பயன் அளிக்காதவர்களையும் மிக விரைவில் குணப்படுத்தி இருக்கின்றோம்.

✱ மாறாத தலை விறைப்பு ✱தலையிடி ✱தலைச்சுற்று ✱தலை அம்மல் ✱மறதி ✱நித்திரையின்மை ✱மூச்சுத்திணறல் ✱இழுப்பு ✱கழுத்துப் பிடிப்பு ✱உளைவு ✱கைகுத்துவேதனை ✱முதுகுவலி ✱முதுகு வளைக்க இயலாமை ✱முதுகு விட்டு விட்டுக் குத்துதல் ✱மூட்டுக்கள் தேய்மானம் ✱நெஞ்சுவலி ✱மனஇறுக்கம் ✱வயிற்றுப் போக்கின்மை ✱வயிறு இறுக்கம் ✱ஊதல் ✱மலம் கறுப்பு நிறமாதல் ✱சமிபாடின்மை ✱கால்விறைப்பு ✱தசைப்பிடிப்பு இன்னும் பல நோய்களைக் குணமாக்கும் அதிசய சிகிச்சை.

✱தை மாதம் தொடக்கம் தங்கும் வசதி உண்டு. முன்பதிவுகள் செய்து கொள்ளலாம்.

**ரெய்கி யோகா வைத்தியம்,**
**(இயன் மருத்துவம்)**
யாழ். பருத்தித்துறை 750 வீதி, சாரையடி.

T.P.: 077 9112969
077 6244880

(68543)

நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஓர் ஆரோக்கியமான, மதிநுட்பத்துடன் கூடிய எதிர்காலமொன்றை பெற்றுக்கொடுக்கின்றீர்களா ?

**Cow & Gate**
**Step-Up 3**

AA, DHA மற்றும் FOS என்பன வயிற்றுப் பகுதி தொற்றுநோய்களை கட்டுப்படுத்துவதுடன் மூளை மற்றும் கண் விருத்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

AA மற்றும் DHA என்றால் என்ன ? மனித உடல் வளர்ச்சிக்குரிய பல்லாயிரக்கணக்கான நுண்ணளவான உடற்கலங்களின் உற்பத்தியில் கொழுப்பமிலங்கள் மற்றும் புரதங்கள் என்பன அத்தியவசிய பங்கை வகிக்கின்றன. AA மற்றும் DHA என்பன மனித மூளை, கண்களின் வளர்ச்சிக்கு உதவும் கலங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் முக்கிய கொழுப்பமிலங்களாகும். இவ் அத்தியாவசிய கொழுப்பமிலங்கள் தேவைக்கேற்றளவில் கிடைக்கப்பெறாதவிடத்து குழந்தையின் இவ்விரு முக்கிய அங்கங்களின் வளர்ச்சி பலவீனப்படுத்துவதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்றன. அதனால் இவ்வகையான அபாயநிலைகளை தவிர்த்து குழந்தைகளின் ஆரோக்கியமான மதிநுட்பத்துடன் கூடிய வாழ்க்கையின் ஆரம்பத்தை பெற்றுக்கொடுக்கவேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

FOS என்றால் என்ன ? குழந்தையின் இளம் மென்மையான குடல்களில் பற்றீரியா மற்றும் வைரசுகளின் தொற்றலால் தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. FOS (Fructo Oligo Saccharides) எனும் பிரதான நார்ப்பொருள், குடற்பகுதிகளில் நன்மை பயக்கும் பற்றீரியாக்களின் உற்பத்தியை ஊக்குவித்து அவற்றின் மூலம் நோய்களை விளைவிக்கும் பற்றீரியாக்களினதும் வைரசுக்களினதும் வளர்ச்சியை கட்டுப்படுத்துகின்றது. இதன் இறுதியான பிரதிபலனாக வயிற்றுப்பகுதி தொற்றுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

1-3 வயது வரையான சிறுவர்களுக்கான போசணையிகு பாலுணவு




மேலதிக தகவல்களுக்கான தொடர்பு 0773-136727, 0773-290191. விநியோகஸ்தர்கள் டபிள் மட்சர் கண்ட் கம்பனி லிமிட்.

## பரிசளிப்பு விழா

ஏழாலை தெற்கு அ.மி.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் ஒளிவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் கு.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் செ. மகாதேவா கலந்து கொள்வார். (202)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், செவ்வாய் குற்றம் உள்ள, 1974, விசாகம், லக்கினம் 12, 3 சுற்றும் 30 பாவம் உள்ள லண்டன் P.R மணமகனுக்கு பட்டதாரிப் பெண் தேவை.

தொடர்பு: சி.நேசன்,
Y.M.H.A.முன்பாக, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. T.P:077 4005968
(68731)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், செவ்வாய்க் குற்றம் உள்ள, லக்கினம் 32, 3 சுற்றும் 40 1/2 பாவம், 1970, பூரட்டாதி, B.Sc பட்டதாரி ஆசிரியருக்கு ஏற்ற பெண் தேவை. உத்தியோகப் பெண் விரும்பத்தக்கது.

தொடர்பு: சி.நேசன்,
Y.M.H.A.முன்பாக, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. T.P:077 4005968
(68733)

## மணமகன் தேவை

செவ்வாய்க் குற்றம் இல்லாத, லக்கினம்52, 3 சுற்றும் 76 பாவம், 1979, பூரம், லண்டன் பட்டதாரிப் பெண்ணுக்கு மணமகன் - உயரம் 5'7" உள்ள ஆண் தேவை.

தொடர்பு:
சி.நேசன்,
Y.M.H.A.முன்பாக,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
T.P:077 4005968

செல்வராசா உமா,
பிள்ளையார் கோயில் வடக்கு,
ஏழாலை வடக்கு.
(68732)

## தவறிவிட்டது

138/3, கோயில் வீதி, (நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி), நல்லூர் என்னும் முகவரியில் வசிக்கும் யாழினி விஜயஈஸ்வரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (858204267 V), விசேட அ.அ.(0902038462), Insurance, Institute Licence என்பன 2 கிழமைக்கு முன்னர் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். (68630)

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

## இறைச்சிக்கோழி

3Kg விற்கு மேற்பட்ட புறொயிலர் 1Kg 450/-, சுத்தம் செய்தது 650/-. வியாபாரிகளுக்கு விலை குறைக்கப்படும். (சுத்தம் செய்தல் இலவசம்)

1. NEW R.S.K FARM மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. NEW R.S.K FARM கே.கே.எஸ் வீதி சுன்னாகம் (கொமர்சல் வங்கி அருகில்)

(68707)

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 10.12.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**றாஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
(68634)

## நகரசபை, சாவகச்சேரி
## 2008ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபையின் (255 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமையளிக்கப்பட் டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

*01. கட்டளைச் சட்டத்தின் 160 (3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகரசபையின் பரிபாலன எல்லைக்குட்பட் டு அமைந் திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10 % மான வரியொன் றினை 2008 ஆம் ஆண்டு முறையே மார்ச் 31,ஜூன் 30, செப்ரெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாயத் தவணைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.*

*02. 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்காந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாகக் கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 05% கழிவும் அனுமதிக்கப்படும்.*

*03. மேற்சொல்லப்பட்ட பந்தி1 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக் காணிகள், வதிவிடங்கள் மீது 15 % மும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% மும் விறாந் துக் கட்டணம் அறவிடப்படும்.*

*04. ஆதனவரி சார்பாகச் சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2008 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி அன்புடன் வேண்டப்படுகிறீர்கள்.*

திருமதி கு.ஆறுமுகம்
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
06.12.2007

(சி/54643)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
21
.
11
.
1944



விண்ணில்
11
.
12
.
2004

**அமரர் பூதத்தம்பி சந்திரமௌலீசன்**
(ஓய்வுபெற்ற நீதிமன்ற ஊழியர் - சாவகச்சேரி)
திதி: 09.12.2007

ஆண்டு மூன்று ஆனது ஆறிடுமோ எம் துயரம்
நீண்ட சோகம் நிலைத்துவிட்டது
வாழ்ந்த காலம் வளம் பெறச் செய்தீர்
அப்பா என்று அழைக்க தப்பாமல் கடமைகள் செய்தீர்கள்
எக்காலும் அழியாச் செல்வத்தை ஊட்ட உற்சாகம் தந்தீர்கள்
பட்டம் பெற்றோம் பார்க்க பக்கத்திலில்லை
பாவிகள் பதை பதைக்கின்றோம்
கண்ணீர்ப் பூக்களை காலடியில் காணிக்கையாக வைக்கின்றோம்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
(68637)

**MALAYSIAவில் உயர் கல்வி**

- **$ 6,000*** பெறுமதியான புலமைபரிசில்கள் உண்டு!
- UK, Australia, Canada வுக்கு கற்கை மாற்று வசதிகள்!
- பகுதிநேர தொழில் வாய்ப்புகள்!
- நியாயமான கட்டணங்கள்! தவணைமுறையில்!

**KLIUC** கோலாலம்பூர் பொறியியல் பல்கலைகழகம்
KUALA LUMPUR INFRASTRUCTURE UNIVERSITY COLLEGE
கலைமாணி கற்கைகளுடன் பொறியியல் டிப்ளமா கற்கைகளுக்கு மிகுபிரபலமான நிறுவனம்

**NC Nilai International University College**
MALAYSIA
16 கற்கைகளுக்கு ஒரே கழகம் மட்டுமல்ல,
New Aircraft Maintenance Engineering கற்கையும்

**BINARY UNIVERSITY COLLEGE**
A SPECIALIST UNIVERSITY FOR BUSINESS, IT & MANAGEMENT

- கணக்கியல்
- முகாமைத்துவம்
- உயிரியல் தொழில்நுட்பம்
- சந்தைப்படுத்தல்
- பொறியியல்
- சமையற்கலை
- விருந்தோம்பல்

- உயிரியல் இரசாயனம்
- நிதியியல்
- கணினி கற்கைகள்
- மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பம்
- தாதியர் கற்கை
- காப்பீட்டியல்

- ஹோட்டல் முகாமைத்துவம்
- வர்த்தகம்
- ஊடகவியல்
- வானூர்திபேணல் தொழில்நுட்பம்
- அழகியல்

**TAYLOR'S UNIVERSITY COLLEGE**
Wisdom · Integrity · Excellence

| | |
|---|---|
| Hospitality & Tourism | |
| Business | University of South Australia; University of the West of England, Bristol |
| Communication | University of South Australia |
| Computing | RMIT UNIVERSITY |
| Engineering | UNIVERSITY OF BIRMINGHAM |
| architecture building & design | The University of Melbourne; Queensland University of Technology |

**MAHSA COLLEGE**
College of Medical and Allied Health Sciences
மருத்துவ கற்கைகளுக்கு மகோன்னத பல்கலை நிறுவனம்!

**UCSI** A University par excellence
Canadian Transfer to Manitoba University
14 கற்கைகளுக்கு புகழ்பூத்த நிறுவனம்

- ENGINEERING
- BUSINESS
- IT & MULTIMEDIA

**SWINBURNE** UNIVERSITY OF TECHNOLOGY SARAWAK CAMPUS
முதுகலைமாணி பட்டங்கள் அனைத்தும்

**MILLENNIUM CONCEPTS (PVT) LTD.,**
225-3/2, Galle Road, Colombo-4. Tel : 2552765
(Adjoining Visaka Road, Bambalapitiya.)
www.mclearninghub.net

மேலதிக விபரங்களுக்கு :
0773 - 40 50 60
0714 - 90 49 49

MC LEARNING HUB

இரு* வாரங்களில் பயணம்

* நிபந்தனைகள் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுக்கோவில்

கைமுனுவுக்குப் படுக்கை கொள்ளவில்லை. அவன் பட்டமகிஷி மஞ்சத்தில் நிம்மதியாய் உறங்கிக்கொண்டிருந்தாள். அவனுக்கு மட்டும் அந்த நிம்மதி கிடைத்தபாடில்லை. மரணத்தின் ரேகை அவன் ஒவ்வொரு அங்கத்திலும் படிந்திருந்தது.

கைமுனு எழுந்தான். அவன் கால்கள் தள்ளாடித் தள்ளாடி நிலா முற்றத்தை அடைந்து விட்டன.

நிறைமதியின் குளிர் கிரணங்கள் அனுராதபுரியின் கோட்டைகளில் படிந்து ஒரு புதுவித சோபையை அவற்றிற்கு அளித்தன. நிலவின் போதையில் ஆழ்ந்து உலகம் நிம்மதியாய் உறங்கிக்கொண்டிருந்தது. நீலவானை அழகு செய்த தாரகைக் கும்பல்களையாவது, மலர்களின் மணத்தில் படிந்து இன்பகரமாய் வீசிய வசந்தகாலத் தென்றலையாவது கவனிப்பார் எவருமில்லை.

அவன் மயங்கிய கண்கள் அதை நோக்குகின்றன. ஏன் அவன் முகத்திற் சோகப் பாசி படர்கிறது?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் இறுப்பது போன்று தூரத்தில் ரூவான்வெலி சமாதி காட்சி அளித்தது. நிலவின் ஒளியிலே தெரிந்த பாதி முடிக்கப்பட்ட அந்தக் கட்டடம் அவன் கண்களை உறுத்தியது போலும்....

பனிவரையிலிருந்தோடும் நீரூற்றுப் போன்று கிழ அரசனின் பால் போல் வெளுத்த தாடியின் வழியாகக் கண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது; அவன் குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுதான். அவன் தேகம் நடுங்கியது.

'மகாராஜா' என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான், பட்டமகிஷி பக்கத்தில் நின்றாள் 'மகாராஜா! எவ்வளவு நேரமாக இங்கிருக்கின்றீர்கள்' என்று அவள் கேட்டாள்.

'தேவி! மகாராஜா என்று சொல்லிச் சொல்லி என் பிராணனை வாங்காதே. நான் வெகு சாதாரணன். அந்தத் தகுதியைத் தாங்க நான் அருகதையற்றவன்' இதை அவன் சொன்னான். அவன் குரலில் ஆழ்ந்த துக்கத்தின் சாயல்.

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'சுவாமி! அப்படி உங்களுக்கு என்னதான் நேர்ந்து விட்டது. ஈழத்தின் ஏகசக்கரவர்த்தியா இவ்விதம் கூறுவது?'

அரசன் சிரித்தான். ஏமாற்றத்தால் சூழ்ந்த அவன் உள்ளாக்கினி சிரிப்பாக வெளிவந்தது. அக்கனலின் வெம்மையைத் தாங்க முடியாதது போன்று அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

தேவியின் ஆச்சரியம் இன்னும் பன்மடங்காயிற்று 'ஏதோ! புதிர் போடுகிறீர்களே! விஷயம் ஒன்றுமாய் விளங்கவில்லையே?' அவன் கரங்களை அவள் பற்றினாள். அவை மிகவும் குளிர்ந்து மிருதுவாயிருந்தன. போர்க்களத்தில் வெல்லற்கரிய எல்லாளனை வென்று வாகை மாலை சூடியபோதும் அவன் கரங்களை அவள் பற்றியிருக்கிறாள். ஆனால் அன்றைக்கும் இன்றைக்கும் எவ்வளவு வித்தியா சம். இளமையின் வைரம்பாய்ந்த முரட்டுத் தன்மையிருந்ததுஅந்தக்கரங்களில்! இன்று பிணியால் மூடுண்டுள்ள ஒருவன் கரங்களை அல்லவா அவள் பிடித்திருக்கின்றாள்? இந்தச் சிந்தனைக்கு முடிவு ஏற்படுவது போல் அவள் கரங்களில் சில கண்ணீர்த் துளிகள் விழுந்தன. வெப்பமான அக்கண்ணீர்த் துளிகளைக் கண்டு பிரமிப்படைந்த அவள் அரசனை நோக்கினாள்.

இவற்றையெல்லாம் கைமுனு கவனிக்கவில்லை. அவன் பைத்தியக்காரர் போல் பேசிக் கொண்டே போனான். தேவி! என்னால் முடியாத காரியமில்லை. நான் அரசனென்று ஒரு காலத்தில் இறுமாந் திருந்தேன், என் இறுமாப்பும் வீண்போகாமல் நான் எடுத்தகாரியங்களெல்லாம் வெற்றிமேல் வெற்றியளித்தன. ஆனால் இன்று நான் ஒரு சாதாரண மனிதனிலும் கீழானவன் என்ற உண்மை புலனாகிறது. என் கனவுக் கோயில் என்னுடனேயே அழிந்துபோக வேண்டியதுதான். அதோபார் ரூவான்வெலி சமாதியை. அரை குறையாய் இருக்கும் அதைப் பார்க்கப் பார்க்க என் துக்கம் மேலிடுகிறது. என் முன்னிருந்த அரசர்களின் பிரதாபங்களெல்லாம் நான் கட்டும் இதன்முன் மண்டியிடப் போகின்றன என்று நினைத்தேன். ஆனால் புத்ததேவன் என்னை இவ்விதமாகச் சோதனை செய்கிறான். அதற்குமேல் பேசமுடியாதபடி அரசன் நா தழுதழுத்தது.

பட்டமகிஷிக்குப் பின்னும் பொறுக்கக் கூடவில்லை. அவள் கண்களும் கலங்கின. 'சுவாமி! தாங்கள் மனம் கலங்கலாமா? தங்கள் பிணிமாறித் தங்கள் கனவும் நிறைவேறாமற் போகப்போகிறதா? பனிபெய்யும் இவ்விடத்தில் இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும் வாருங்கள்!' என்று அழைத்தாள்.

'எனக்கு அந்த நம்பிக்கை எப்போதே போய்விட்டது. இன்னும் ஒரு நாளோ இரண்டுநாளோ என் உயிர் தங்குவதும் சந்தேகந்தான். அதற்குள் இந்த உடலுக்கு இந்திர போகம் வேறேயா?' அவன் வதனத்தில் புன்சிரிப்பு இழை ஓடியது. எழுந்து நடக்க முயன்றான். கூடவில்லை. பட்டமகிஷியின் தோளின் உதவி கொண்டு மெதுமெதுவாய் நடந்து சயன அறைக்குச் சென்றான். அறையில் தீபம் ஒன்று மங்கி மங்கி எரிந்து கொண்டிருந்தது. எந்த நிமிஷத்தில் அது அணைந்து விடுமோ? யார் கண்டார்?

'இந்தத் தீபத்தின் நிலையில்தான் நானும் இருக்கிறேன்' என்று அவன் சொன்னான். அவன் கண்களில் நீர் ததும்பிற்று. அந்த நிலையில் அரசனைப் பார்க்க வெகு பரிதாபமாய் இருந்தது.

'நிம்மதியாய் உறங்குங்கள்' என்று சொல்லி பட்டமகிஷி அவனை மஞ்சத்தில் படுக்கவைத்தாள். சிறிது நேரத்தில் அவளும் தூங்கிவிட்டாள்.

ஆனால் அவன்.....! சாளரக் கம்பிவழியாக நிலவின் கிரணங்கள் அறையுள் தெறித்தன. பழைய ஞாபகங்களும் அவன் உள்ளத்தில் தெறித்துக்கொண்டிருந்தன. இரவுமுழுவதும் சிந்தனைக் கடலிலேயே மூழ்கியிருந்தான்.

விஷமக்காரச் சிறுவன் கைமுனு; வீரனாக வேண்டித் தந்தையை எதிர்த்த துட்டகைமுனு; போர்க்களத்தில் வாகைமாலை சூடிய வீரன் கைமுனு, புத்ததேவனின் பக்தன் கைமுனு; தன் மகன் நீசப்பெண்ணை மணந்தானென்று அவனுக்கு அரசுரிமை கொடாத தந்தை கைமுனு, இவ் எல்லாப் பருவங்களும் அவன் கண்முன் வந்துநின்றன. ஆனால் இப்போதைய பருவம்! முதுமையால் தோல் சுருங்கித் தட தடவென்று நடுக்கத்துடன்.....! ஐயோ அதை நினைக்கவே வேண்டாம்.

இவற்றினும் மேலாக அவன் மனத் துக்கத்தில் ஆழ இருந்த காரணம் ரூவான்வெலி சமாதித்தான். அதைக் கட்டுவதற்காக அவன் போட்ட திட்டங்களெல்லாம் வெறுங் கனவுகள்தானா?

* * *

அடிவானம் வெளுத்தது. தினகரனின் பொன்னிறக்கதிர்கள் உலகைத் துயிலெழுப்பின. முதல்நாள் மலர்ந்த மலர்கள் யாவும் தங்கள் வாழ்க்கையின் சாரத்தை இழந்தவை போன்று வாடிக்கிடந்தன. நேற்று மொக்குகளாகவிருந்தவை இன்று மலர்ந்து வாழ்க்கை இன்பத்தை நோக்கி ஆவலுடன் காத்துக் கொண்டிந்தன. இரவு அமைதியில் துயின்ற நகரம் இப்போது அமர்க்களப்பட்டது. யாவரும் துயிலெழுந்து தங்கள் தங்கள் கருமங்களை நாடிச் சென்று கொண்டிருந்தார்கள்.

கைமுனு சத்தியற்றுத் தன் மஞ்சத்திற் படுத்திருந்தான். அவன் கண்கள் பொலிவிழந்திருந்தன. பேச்சுக்கூட எங்கோ ஆழ்ந்த குகையிலிருந்து எழுவது போன்றிருந்தது.

எல்லோரும் துக்கப்பட்டார்கள். வைத்தியர்கள் அவன் நாடியைப் பார்த்துவிட்டு முகத்தைச் சுழித்தார்கள். ஒவ்வொரு விநாடியும் கழிவது ஒரு யுகமாயிருந்தது.

கைமுனுவின் கண்கள் சுற்றியிருந்த சுவர்ச் சித்திரங்களை ஒருமுறை நோக்கின. அங்கே!... அங்கே! அவன் விழிகள் அந்தச் சித்திரத்தில் நிலைத்துவிட்டன.

தந்தை கவந்தீசன் கைமுனுவினதும் சதாதீசனதும் உணவை முப் பிரிவாக்கி ஒவ்வொரு பகுதியையும் தான் சொல்வதுபோல் சபதம் செய்து உண்ணும் படி கேட்கிறான்.

முதலாவது: சகோதரர் யாவரும் எந்நாளும் ஒற்றுமையாய் இருக்க வேண்டும்.

அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டு அப்பகுதியை உண்கிறார்கள்.

இரண்டாவது: புத்த பிக்குகளை எந்நாளும் ஆதரிக்க வேண்டும். அதற்கும் இணங்குகிறார்கள்.

மூன்றாவது: தமிழருடன்சண்டைசெய்யாமல் அவர்களுடன் ஒற்றுமையாய் இருக்க வேண்டும்.

இதற்கு அவர்கள் இணங்காது கோபத்துடன் வெளி யேறுகிறார்கள்.

அரசனின் கண்களில் ஒரு புது ஒளி தோன்றியது. நான் இறந்தாலும் என்னை வாழ்விலும் தாழ்விலும் பின்பற்றிய சதாதீசன்- என் தம்பி இருக்கிறானல்லவா? என்றுஅவன் சிந்தனை அலைபாய்ந்தது. அவன் சதாதீ சனை ஏக்கம் ததும்ப ஒருமுறை பார்த்தான்.

சதாதீசன் மனம் கொந்தளித்தது 'அண்ணா! என்னவேண்டும்' என்று அவனருகில் வந்து நின்றான்.

கைமுனு சொன்னது இவ்வளவுதான். 'சதா! ரூவான்வெலி சமாதி!'

சதாதீசன் வேகமாய்த் திரும்பினான். அவன் கால்கள் ரூவான்வெலியைநோக்கி வேகமாய்ச் சென்றன.

* * *

அந்தி மங்கும் நேரம். ஒரு பல்லக்கு ரூவான்வெலியை நோக்கி வந்தது. பல்லக்கின் திரைகள் விலக்கப்படவும் கைமுனு ரூவான்வெலிச் சமாதிப் பக்கம் தன்கண்களைத் திருப்பினான். ஆச்சரியத்தால் அவன் கண்கள் மலர்ந்தன.

நேற்றுவரை அரை குறையாகக் கிடந்த அது இன்று வான முகட்டை எட்டி நின்றது. கைமுனுவின் கனவுக் கோவில் உலகில் சாசுவதமாக இடம்பெற்றுவிட்டது. அவ்வளவு தானே அவன் வேண்டியிருந்ததும்.

அவன் கண்கள் மலர்ந்தன. மலர்ந்தபடியே நின்று விட்டன. அவன் முகத்தில் புன்னகை நர்த்தனம் புரிந்தது. மரணதேவதையின்அரவணைப்பில் அவன் நிரந்தரமாய்ச் சரணடைந்து விட்டான்.

திரைச் சீலைகளாலும் மூங்கில்களாலும்தான் அது முடிவு பெறச் செய்யப்பட்டது என் பதை அவன் அறிந்தானா? ஆனால் அவனளவில் 'கனவுக் கோவில் நிறைவேறியமாதிரித்தான். *

நன்றி: ஈழகேசரிச் சிறுகதைகள்



ஈழத்தின் புகழ் பூத்த புலமையாளர்களில் ஒருவரான மூதறிஞர் **சொக்கன் ஐயா** அவர்கள், பன்முகத் திறமை கொண்ட இலக்கிய கர்த்தாவும் ஆவார். சிறுகதை, கவிதை, நாடகம் இலக்கியக் கட்டுரைகள் என்று எல்லாவற்றிலுமே தடம் பதித்தவர்; அத்துறை களில் முன்னணியில் மிளிர்ந்தவர். சிறுகதைத் துறையில் தொகுதிகள், கவிதைத் துறையில் காவியங்கள், நாடக நூல்கள் என்று பலவற்றை ஆக்கியவர். அவற்றில் பலவற்றுக்குப் பரிசில்களையும் பெற்றவர்.

**"கனவுக் கோவில்"** அவர் 1947 ஆம் ஆண்டில் ஈழகேசரியில் எழுதிய சிறுகதை. மறுமலர்ச்சிக் காலம் தொடக்கம் ஆறு தசாப்தங்களுக்கு அதிகமான காலத்தில் தளராது பலதுறைகளில் எழுதி வந்த பெருமை அவர் பதித்த தனிச்சிறப்புடன் மின்னும் முத்திரையாகும். பல சந்ததி எழுத்தாளர்களுடனும் "போட்டிக்கு" எழுதிப் பெயர் பொறித்தவர் அவர். எழுத்துத்துறையில், இலக்கியத் துறையில் அவர் கைதொடாத ஒன்றென எதுவும் இல்லை எனக் கூறுமளவுக்கு பல்துறைசார் வல்லுநர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துப் பெருமைத் தேடிக்கொண்டது.

பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணி தொடங்கிய அவர் முதுகலைமாணியாக உயர்ந்து கல்விப் புலத்திலும் பரந்தளவில் மதிக்கப்பட்டவர்.

# 'தைரொயிட்' சுரப்பி வீக்க நோய்க்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை பெற வேண்டும்

சுகநலம்

**வினா1:** எனது வயது 14. நான் ஒரு பெண். எனக்கு கண்டல் கழலை நோய் கடந்த 7 வருடங்களாகவுள்ளது. அதற்கு நான் 3 வருடத்துக்கு முன்பு வைத்தியரிடம் காட்டியபோது அவர் இரத்தம் பரிசோதித்து மருந்து தந்தார். அம் மருந்தைத் தொடர்ந்து குடித்து வந்தபோது எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால், எனக்கு அம் மருந்தைக் குடித்தபோது மாதவிடாய் சிலவேளை ஏற்படாது. ஏற்பட்டாலும் அதிக குருதி வெளியேறுகிறது. நான் இப்பொழுது மருந்து குடிப்பதில்லை. மாதவிடாய் ஒழுங்காக நடைபெறுகிறது. என்னுடைய அப்பம்மாவிற்கும் இந்தவருத்தம் இருந்தது. இப்பொழுது கண்டல் கழலை குறைவதும், அதிகரிப்பதுமாக உள்ளது. இதனை இல்லாமற் செய்வதற்கு ஏதேனும் வழிகள் உள்ளதா?

**விடை1:** நீங்கள் கண்டல் கழலை என்று குறிப்பிட்டது உங்கள் கழுத்தின் முன்பாக இருக்கும் தைரொயிட் சுரப்பி வீக்கமடைந்திருப்பதையாகும். இது போன்ற வீக்கம் உங்களுக்கு 7 வயதில் இருந்து இருப்பதாகச் சொல்கிறீர்கள். இது உங்களுக்கு அயடீன் குறைவால் ஏற்படலாம். ஆனால் நீங்கள் மீன் சாப்பிடுபவராயின் அல்லது அயடீன் சேர்ந்த உப்பு பாவிப்பவராயின் அதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு.

அதைவிடச் சிலருக்குச் சாதாரணமாக இந்தச் சுரப்பி 10 வயது தொடக்கம் மாதவிடாய் ஏற்படுவதுபோல் மாதவிடாயுடன் தொடர்பாக இடையிடையே வீக்கம் ஏற்பட்டுக் குறைவடையலாம். அது சாதாரணமாக ஏற்படக்கூடியது. (Physiological) இருப்பினும் அந்த வீக்கத்தைத் தொடர்ந்து குறைத்து வைப்பதற்காக சிறிதளவு தைரொக்சின் மாத்திரைகள் கொடுக்கப்படுவது வழக்கம்.

சிலருக்கு தைரொயிட் சுரப்பியில் ஏற்படும் அழற்சி காரணமாக வீக்கமடைந்திருக்கும். இந்த அழற்சி ஏற்பட்டு சுரப்பி சில சமயம் கூடுதலாக தைரொட்சின் ஓமோனைக் குருதியில் வெளிவிடும். சில சமயம் மிகக் குறைவாக தைரொட்சினை வெளிவிடும். மேற்படி ஓமோன் உடலில் அதிகமாக இருக்கும்போது நிறைகுறைவு, அதிகபசி, நடுக்கம், அதிக வியர்வை, நெஞ்சு படபடப்பு போன்ற பிரச்சினைகள் இருக்கும். மிகக் குறைவான ஓமோன் இருக்கும்போது பஞ்சி, தூக்கக்குணம், உடல் பருமனாதல், பசிக்குறைவு, மாதவிடாயின்போது அதிக குருதி வெளியேற்றம் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

மேற்படி அழற்சியின் போதும் சுரப்பி சில நேரத்தில் வீங்குவதும் வற்றுவதுமாக இருக்கலாம். ஆகவே உங்களுக்கு உள்ள பிரச்சினை தைரொயிட் அழற்சியினால் எற்பட்டிருக்கலாம். அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கும்போது இரத்தப் பரிசோதனை செய்து உங்களின் ஓமோனின் அளவு அதிகமாகவா அல்லது குறைவாகவா இருக்கிறது என்பதைத் தெரிந்து அதற்கேற்றபடி மாத்திரை பாவிப்பதன் மூலம் சரிசெய்ய வேண்டும். இந்த நோய் ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு இருந்தால் மற்ற குடும்ப அங்கத்தவர்களுக்கு வரக் கூடிய சாத்தியக் கூறு அதிகம். ஆனால் இது ஒரு தொற்று நோயல்ல. இத் தைரொயிட் சுரப்பியாருக்காவது வீங்கி இருந் தால் அல்லது

"மருந்துவ ஆலோசனை"
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

இருந்த வீக்கம் திடீரென அதிகரித்தால் வைத்திய ஆலோசனை பெறுதல் அவசியம்.

**வினா 2 :** எமது தைரொயிட் தொடர்பான அறிக்கையில் குறிக்கப்பட்டிருக்கும் T3, T4, TSH ஆகியவற்றினை தயவுசெய்து தெளிவாக விளக்குக.

**விடை:2** T3 என்பது தொழிற்படும் நிலையிலுள்ள தைரொக்சின் ஓமோன் ஆகும். Triiodo thyronin

T4 ,இல் எ[illegible] இருக்கும் தைரொக்சின் ஓமோன் ஆகும். Tetraiodo thyronin

T4 இருந்தே T3 தைரொயிட் சுரப்பியிலும் மற்றும் கலங்களிலும் உருவாக்கப்படுகிறது.

TSH என்பது தைரொக்சினை தைரோயிட்டில் இருந்து சுரக்கத் தூண்டுவதற்காக கபச்சுரப்பியில் சுரக்கப்படும் ஊக்கப்பதார்த்தம் ஆகும். Thyroid Stimulating hormones மேற்படிபரிசோதனையை தைரொயிட் வருத்தம் இருக்கிறது என்று சந்தேகப்படுவோரில் செய்வது முக்கியம்.

மேற்படிப் பரிசோதனையை செய்வதன் மூலம் எமது தைரொயிட் சுரப்பி அதிகமாக வேலை செய்கிறதா, சாதாரணமாக வேலை செய்கிறதா அல்லது குறைவாக வேலை செய்கிறதா என்பதையும் மேற்படி பிரச்சினை தைரொயிட் சுரப்பியில் ஏற்பட்ட பிரச்சினையா அல்லது கபச் சுரப்பியில் TSH சுரக்கப்படுதலில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணத்தால் ஏற்பட்டதா என்பதை அறிய முடியும்.

**வினா 3 :** சர்க்கரை வியாதி என்றால் ஏற்படும் அறிகுறிகள் எவை?

**விடை3 :** நீரிழிவு நோய்/ சலரோகம் அல்லது02 நோயையே சர்க்கரை வியாதி என்றும் கூறப் படுகிறது. இந்தியர்கள் சீனி என்ற சொல் லுக்குப் பதிலாகச் சக்கரை என்ற சொல்லையே பாவிப்பதனால் இந்தியத் தமிழர்கள் சக்கரை வியாதி எனக் கூறுகிறார்கள். இந்த நோய் உள்ளவர்களுக்கு இரத்தத்தில் சீனித் தன்மையின் அளவு அதாவது குளுக்கோசின் அளவு அசாதாரணமாகக் கூடுதலாக இருக்கும்.

அசாதாரணமாகக் குளுக்கோசின் அளவு கூடுதலாக இருப்பதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உண்டு.

1. இரத்தத்தில் குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்தும் இன்சுலினின் அளவு குறைவாகச் சுரக்கப்படுவது

2. சுரக்கப்பட்ட இன்சுலின் சரியான விதத்தில் தொழிற்பட முடியாதிருத்தல்.

மேற்படி நோயுள்ளவர்களில் இன்சுலின் குறைவாகச் சுரக்கப்படும். நோயாளர்கள் அனேகமாக சிறுவயதில் ஏற்படும் சலரோக நோயாளர்களுக்கு,

அதிக சிறுநீர் வெளியேற்றம்
அதிக தாகம்
அதிக பசி
உடல் மெலிவு
உடல் சோர்வு போன்ற அறிகுறிகள் காணப்படும்.

ஆனால் சுரக்கப்பட்ட இன்சுலின் சரியாக வேலைசெய்யாமல் நோய் ஏற்படுபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் இல்லாதிருக்கும் அல்லது குறைந்தளவில் காணப்படும். இவர்களுள் அனேகமாக கிருமித் தாக்கம் காரணமாக,

உதாரணம் சலத்தில் கிருமி (சல எரிவு) சலம் போகிற இடத்தில் சொறிவு, உடலில் சிறு சிதள் கட்டி அல்லது கை கால்களில் ஏற்பட்ட புண் இலகுவில் மாறாதிருப்பது போன்ற அறிகுறிகளுடன் தான் அனேகமாக வைத்திய நிலையத்திற்கு வருவார்கள்.

மற்றும் சிலருக்கும் மேற்படி அறிகுறிகள் எதுவும் இருக்காது. ஆனால் அவர்கள் இருதய வருத்தம், கண்களில் வெள்ளை படர்தல் போன்றவற்றிற்கு வைத்தியசாலைக்கு வரும்போது இரத்தப் பரிசோதனைகளின்போது சலரோகம் இருப்பது தெரியவரும்.

மேற்படி கிருமித்தாக்கம், இருதய நோய், கண்களில் வெள்ளைபடுதல், சிறுநீரக வருத்தம் என்பனவும் சலரோகத்தின் பாதிப்பால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் ஆகும்.

உங்கள் கேள்விகளுக்கு மருந்துவ நிபுணர்கள் பதில் தருகிறார்கள்

கீழ்கண்ட முகவரிக்கு கடித மூலமாகவோ, தொலைபேசி எண்ணுக்கு SMS மூலமாகவோ தொடர்புகொண்டு உங்கள் வினாக்களை பதிவு செய்யலாம். அத்துடன் அருகில் காணப்படும் சின்னத்துடன் எம்மால் நிறுவப்பட்டுள்ள வினா சேகரிப்பு பெட்டிகளில் உங்கள் வினாக்களை இடுவதன் மூலமும் அவை எம்மை அடைவதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். உங்கள் கேள்விகளும் பதில்களும் பிரதி ஞாயிறு தோறும் உங்கள் உதயனில் பிரசுரமாகும்.
(உங்கள் வினாக்களில் வயது, பால் என்பன கட்டாயம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.)
மருத்துவ ஆலோசனை
மருத்துவபீடம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. T.P:0777 179268

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச முன்னாள் கிராம உத்தியோகத்தர்
நமசிவாயம் இரவீந்திரன் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் ஆறுமுகம் நமசிவாயம்

அவர்கள் 05.12.2007 அன்று காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வலி.தெற்கு, உடுவில். (68750)

பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

## 35 ஆம் நாள் நினைவுகளும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம்
06★09★1941

மறைவு
05★11★2007

### அமரர் செல்லையா சண்முகநாதன்

(பிறப்பிடம் - இணுவில் கிழக்கு,
வதிவிடம் - சித்திரமேழி, இளவாலை)

அன்புடன் பண்பும் பக்தியும் கொண்டு
அழகாய் அளவளாவும் தன்மையும் பூண்டு
உற்றார், உறவுகள் 'சண்முகமென' அழைத்திட
உறவுகளுக்கெல்லாம் பாலமாய் திகழ்ந்திட்ட
என் இனிய குடும்பத் தலைவா.... நின்
பிரிவுத் துயர் தாங்காது வாடுகின்றோம் - உமது
ஆத்மா சாந்தி பெறத் துதிக்கின்றோம்.

கடந்த 05.11.2007 திங்கட்கிழமை இறையடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் விட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.12.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இளவாலை. (68652) குடும்பத்தினர்.

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.9

'எவர்சைன் கிட்ஸ் வேல்ட்'டின் முதலாவது கலைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் தலைவர் திருமதி ச.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் கலந்து கொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.9

பத்தமேனி விநாயக சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று காலை 9மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதன் ஜெகதீசன் கலந்து கொள்வார். (202)


## NATIONAL COOLERS
நஷனல் கூலர்ஸ்

குளிர்சாதனப் பெட்டி, A.C உங்கள் இருப்பிடத்திற்கு வந்து சிறந்த முறையில் பழுது பார்த்து கொடுக்கப்படும்.

தொடர்பு: ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்
(சிவன்கோவில் முன்பாக)
0776134790 (68746)


## தேவை

யாழ்.புறநகர்ப்பகுதியில் ஆரம்பிக்கஉள்ள நுண்கலைப் பயிலகத்துக்கு சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், கிற்றார், வீணை போன்றவற்றைக் கற்பிக்க ஆசிரியர்கள் தேவை.

மே/பா உதயன் 5034
யாழ்ப்பாணம். (68741)

## தவறிவிட்டது

சேச்றோட், சங்கானையைச் சேர்ந்த கிருபைராசா யூட்பெனடிற் என்பவரது கடவுச்சீட்டு கட்டுவனுக்கும் சேச்றோட் சங்கானைக்கும் இடையில் தவறவிட்டது. ஆகவே இதனை கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

*(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)*

கி.யூட்பெனடிற்,
சேச்றோட், சங்கானை. (68748)

*சிவமயம்*
*"அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை - அதனை மறத்தலினூங் கில்லைக்கேடு"*

## செல்வச்சந்நிதி ஆனந்தசாமி மடம்

பதிவு இல : HA/4/JA/219

தொண்டைமானாறு
09.10.2007

### நன்றி நவில்கின்றோம்

செல்வச்சந்நிதியில் இம்முறை நடந்த பெரும் திருவிழாவிற்கு நயினாதீவைச் சேர்ந்த அடியார்கள் தந்துதவிய நிதியில் இருந்து அன்னதானம், தேநீர், குளிர்பானம் முதலியன வழங்கப்பட்டன.

எமக்கு உதவி செய்த அனைத்து அடியார்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மடத்திற்கு பல வேலைகள் செய்யப்பட உள்ளன. எனவே உதவி செய்ய விரும்புகின்றவர்கள் இயன்ற உதவி செய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*2007ஆம் ஆண்டு நிதி உதவிய அன்பர்கள்*


திரு.எஸ்.குணராசா - முதலாம் வட்டாரம், நயினாதீவு
திரு.எஸ்.சின்னத்துரை - முதலாம் வட்டாரம், நயினாதீவு.
திரு.I.செல்லையா - அனலைதீவு

| | |
|---|---|
| பணத்தொகை | - 34161.00 |
| செலவு விவரம் | - 28500.00 |
| கையிருப்பு | - 5661.00 |

மிகுதிப் பணத்தை தெய்வானைப்பிள்ளை
ஆகிய நான் பெற்றுக் கொண்டேன்
வ.தெய்வானைப்பிள்ளை
(நிர்வாகி)

(சி/54644)

## 3 ஆவது சிரார்த்த நாள் நினைவஞ்சலி



தோற்றம்
19•01•1937

மறைவு
11•12•2004

### அமரர் கோவிந்தர் கணபதிப்பிள்ளை

திதி: கார்த்திகை அமாவாசை, சிரார்த்த நாள் 09.12.2007 ஞாயிற்றுக்கிழமை

ஆண்டொரு மூன்று அகன்று மறைந்தாலும்
அமைதி பொங்கும் உமது முகம் கனவினிலே விழிக்கிறதே!
மாண்புடனே எமையெல்லாம் மகிழ்நிலைக்கு உருவாக்கி
வானகத்து மகிழ்ந்திருந்தெம் வளவாழ்வைக் காண்குவையே!

*கரணவாய்,*
*கரவெட்டி.* (68604)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அழியாத நினைவுகளில் ஆண்டொன்று...

அன்னை மடியில்
04 . 01 . 1934
ஆண்டவன் அடியில்
07 . 12 . 2006

பாசத்தின் திருவுருவாய்
பண்பின் இருப்பிடமாய்
தேசத்தின் நன்மைக்காக
உழைத்த அன்புருவே!
அன்புடன் வாழ்ந்து இன்முகங்காட்டி
எங்களின் மகிழ்ச்சிக்காய்த்
தங்களையே அர்ப்பணித்தீர்கள்!
உங்கள் உடல்தான் மறைந்ததே தவிர
உருவம் மறையவில்லை!
எங்கள் நெஞ்சங்களின் பாசதீபமாய் ஒளி வீசி
இப்பொழுதும் வாழ்கின்றீர்கள் ஐயா!



### அமரர் தம்பையா குமாரசாமி

(உரிமையாளர்:
த.குமாரசாமி றெக்ஸ்ரைல்ஸ், த.குமாரசாமி அன் சன்ஸ்)

நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ...

பலதும் பத்தும்

# இரட்டைச் சாதனை



பழையதாக இருந்தாலும் மவுசு குறைந்த விடாது என்பது உலகப் புகழ் பெற்ற சொகுசு கார் விடயத்தில் நிருபணமாகி இருக்கிறது. 'ரோல்ஸ் ரொய்ஸ்' கார் உலகிலேயே சொகுசானதாகக் கருதப்படுகிறது. பல சொகுசு கார்கள் வந்து விட்டாலும் 'ரோல்ஸ் ரொய்ஸ்'க்கு இருக்கும் மதிப்பே தனிதான்.

அப்படியிருக்க உலகிலேயே பழமையான 'ரோல்ஸ் ரொய்ஸ்' என்றால் அதன் மதிப்பு எக்கச்சக்கமாகத் தானே இருக்கும். அதுதான் 1904 ஆம் ஆண்டு தயாரான 'ரோல்ஸ் ரொய்ஸ்' கார் ஏலத்தில் பல மடங்கு விலைக்குப் போயிருக்கிறது.

உலகிலேயே மிகவும் பழமையான 'ரோல்ஸ் ரொய்ஸ்' காராகக் கருதப்படும் இது விற்பனையிலும் சாதனை படைத்திருக்கிறது.

அதிக விலைக்குப் போன 'ரோல்ஸ் ரொய்ஸ்' கார் மற்றும் அதிக விலைக்கு விற்ற பழைய கார் ஆகிய இரண்டு சாதனைகளையும் இந்தக் கார் தனதாக்கியுள்ளது.

கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டாலும் இந்தக் கார் இன்னமும் ஓடும் நிலையில் இருக்கிறது என்பதுதான் விசேடம்.

# காவல் ரோபோ



வீடுகளை கூட்டி, பெருக்கி, சுத்தம் செய்வது மட்டுமன்றி அத்துமீறி யாராவது நுழைந்தால் ஒலி எழுப்பி எச்சரிக்கும் புதிய ரோபோக்களை தென்கொரியாவின் இரண்டு நிறுவனங்கள் கூட்டாக உருவாக்கி இருக்கின்றன. இந்த ரோபோவை வீட்டில் எங்கிருந்து வேண்டுமானாலும் செல்போன் மூலம் இயக்கமுடியும்.

''ஐசெல்போ' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ரோபோவில் ஒலிவாங்கி, ஒலிபெருக்கி மற்றும் புகைப்படக் கருவி உள்ளிட்டவை பொருத்தப்பட்டுள்ளன.

ஓராண்டுக்குள் சந்தையில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் 'ஐசெல்போ' ரோபோக்களின் விலை 75ஆயிரம் ரூபா.

# நாய்க்கு கொலை மிரட்டல்



அமெரிக்காவில் நாய் ஒன்றுக்கு அடுத்தடுத்து கொலை மிரட்டல் வந்து கொண்டிருந்தால் அது இரகசிய இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த கோட்டீஸ்வரி லியானோ மரணமடைந்தபோது தனது சொத்துக்களின் பெரும் பகுதியை அவர் வளர்த்து வந்த நாயின் பெயருக்கு எழுதி வைத்து விட்டார்.

இதனையடுத்து அந்த நாய்க்குப் பல கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வந்தது. இதன் விளைவாக அந்த நாய் வேறொரு நகரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே ரகசிய இடத்தில் தங்கவைக்கப்பட்டிருக்கிறது.

நாயைக் காவல் காப்பதற்காகவென்றே வருடத்திற்கு 3 லட்சம் டொலர் செலவிடப்படுகிறது. நாய் மரணமடைந்த பிறகு சொத்துக்கள் அனைத்தும் அறக்கட்டளைக்குச் செல்ல உள்ளது.

# கார்ட்டூனுக்கு அழைப்பாணை



உலகம் முழுவதும் உள்ள சிறுவர்களின் மனங்கவர்ந்த கார்ட்டூன் 'மிக்கிமவுஸ்' மற்றும் 'டோனால்டக்' ஆகிய கார்ட்டூன் பாத்திரங்களுக்கு இத்தாலிய நீதிமன்றம் ஒன்று அழைப்பாணை அனுப்பியுள்ளது.

அந்நாட்டின் நேபிள்ஸ் நகர நீதிமன்றம் இந்த அழைப்பாணையைப் பிறப்பித்துள்ளது. கார்ட்டூன் (கேலிச்சித்திர) கதாபாத்திரங்கள் எப்படி நீதிமன்றத்தில் ஆஜராக முடியும் என்று நீங்கள் கேட்கலாம். அந்த நீதிமன்றத்தில் 'வோல்ட் டிஸ்னி' என்ற அமைப்பின் சார்பில் காப்புரிமை வழக்கு தொடுக்கப்பட்டது.

அந்நிறுவனத்தின் பிரபல கார்ட்டூன் கதாபாத்திரங்களான 'மிக்கிமவுஸ்', 'டோனால்டக்' ஆகியவற்றின் பெயர்கள் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் அனுப்பப்பட்ட அழைப்பாணையில் கார்ட்டூன் பாத்திரங்களையும் நிஜமான மனிதர்கள் என்று கருதி அவற்றுக்கும் அழைப்பாணை அனுப்பிவிட்டாராம்.

'டிஸ்னி' நிறுவன அதிகாரி, எங்கள் கதாபாத்திரங்களை உண்மையாகக் கருதவேண்டும் என்று நாங்கள் நினைத்து வருகிறோம். எனவே இந்த அழைப்பாணை வந்திருப்பது மகிழ்ச்சியை தருகிறது என்று நகைச்சுவையாக கூறியுள்ளார். ஆனால் கார்ட்டூன் பாத்திரங்கள் நீதிமன்றத்துக்கு வரவில்லை என்று கூறி நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் சரி என்றும் அவர் கூறியுள்ளார்.

# குளிர்ச்சியான காலணிகள்



நீண்ட நேரம் காலணி அணிந்துகொள்வதால் பாதங்களில் வியர்வை அதிகரித்து துர்நாற்றம் ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவைச் சேர்ந்த 'கேட்கெட் யுனிவர்ஸ்' என்ற நிறுவனம் FREE WALK SHOES என்ற பெயரில் வசதி கொண்ட காலணிகளைத் தயாரித்திருக்கிறது.

காலணியின் மேற்புறத்தில் உள்ள சிறிய துவாரங்கள் மூலமாக உள்ளே செல்லும் காற்று பாதம் முழுவதும் பரவி குளிர்ச்சியாக இருக்கும்படி இந்தக் காலணிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தற்போது ஆண்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள இந்தக் காலணிகள் விரைவில் பெண்களுக்காகவும் உருவாக்கப்படும் என்று இதன் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ரிக்கி பொன்டிங், ஜக்கலிஸ் ஆகியோரைப் பின்தள்ளி டெஸ்ட் தரவரிசையில் முதலிடம் பெற்றார் சங்ககாரா! முதல் இலங்கை வீரர் என்ற பெருமையும் அவருக்கு!!

சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் குமார் சங்கக்கார முதலிடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளார்.



அவர் தரவரிசையில் நீண்ட காலமாக முதலிடத்தைத் தக்கவைத்துக்கொண்டிருந்த ஆஸி. அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் மற்றும் ஜக் கலிஸ் ஆகியோரை பின்தள்ளியே முதலாவது இடத்தைப் பிடித்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துடன் முடிவடைந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய சங்கக்கார முதல் இன்னிங்ஸில் 92 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 152 ஓட்டங்களையும் குவித்து ஆட்டநாயகன் விருதையும் வென்றார். இதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட ஐ.சி.சி.டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் 938 புள்ளிகளைப் பெற்ற சங்கக்கார முதல் இடத்துக்கு முன்னேறினார்.

இதன்படி சர்வதேச கிரிக்கெட் சபையின் துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதல் இடத்துக்கு முன்னேற்றம் கண்ட முதல் இலங்கை வீரராக சங்கக்கார பதிவானார்.

இதில் 936 புள்ளிகளை பெற்ற ரிக்கி பொன்டிங் இரண்டாவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டதோடு இரண்டாவது இடத்தில் இருந்த தென்னாபிரிக்க அணியின் சகலதுறை ஆட்டக்காரர் ஜக் கலிஸ் பொன்டிங்கை விடவும் ஒரு புள்ளி மாத்திரம் குறைவாக பெற்று மூன்றாவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டார். முன்னதாக சங்கக்கார் 919 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சதம் பெற்ற யூனிஸ்கான் ஆஸி. வீரர் மதிவ் ஹெய்டனை பின்தள்ளி 7 ஆவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டுள்ளார். இதில் முதல் இன்னிங்ஸில் ஆட்டமிழக்காது 161 ஓட்டங்களைப் பெற்ற பாக். அணியின் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் மிஸ்பா உல் ஹக் 22 இடங்கள் முன்னேற்றம் கண்டு 44 ஆவது இடத்தை பிடித்தார்.

அதே போன்று துடுப்பாட்ட வீரர்களுக்கான ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இந்திய துடுப்பாட்ட வீரர்களும் முன்னேற்றம் கண்டனர். பாகிஸ்தானுடனான இரண்டாவது டெஸ்டில் இரட்டைச் சதம் பெற்ற ஆரம்ப துடுப்பாட்ட வீரர் வசீம் ஜாபர் 17 இடங்கள் முன்னேறி 23 ஆவது இடத்தைப் பிடித்தார். கங்குலி 4 இடங்கள் முன்னேறி 24 ஆவது இடத்திலும் சச்சின் ஒரு இடம் முன்னேறி 17 ஆவது இடத்திலும் உள்ளனர்.

**விடை பெற்றார் ஜயசூரிய**

இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியை இலங்கை அணி 88 ஓட்டங்களால் வெற்றியீட்டிக் கொண்டது. இந்தப் போட்டியைத் தொடர்ந்து இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய தனது டெஸ்ட் வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெற்றார். எனினும் அவர் தொடர்ந்து ஒரு நாள் போட்டிகளில் இலங்கை அணிக்காக விளையாடவுள்ளார்.




கண்டி, அஸ்கிரிய மைதானத்தில் முடிவடைந்த போட்டியில் இங்கிலாந்து அணிக்கு 350 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்நிலையில் 9 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து இங்கிலாந்து அணி பகல் போசன இடைவேளைக்குள் மேலும் 4 விக்கெட்டுகளை பறி கொடுத்தது. இதன் போது அணித் தலைவர் வோகன் 5 ஓட்டங்களுடனேயே வெளியேறியதோடு காயத்துடன் களமிறங்கிய பீட்டர்ஸனால் 18 ஓட்டங்களேயே பெற முடிந்தது.இது தவிர கொலிங்வுட்டினால் 16 ஓட்டங்களேயே பெற முடிந்தது.

## இங்கிலாந்துடனான வெற்றியுடன் டெஸ்டில் விடை பெற்றார் ஜயசூரிய

இதனிடையே மூன்றாவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய இயன் பெல் இங்கிலாந்து அணியின் தோல்வியைத் தவிர்க்க கடைசி வரை போராடினார். இதன்போது அவர் 6 ஆவது விக்கெட்டுக்காகப் ப்ரியருடன் இணைந்து 109 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதில் பெல் 209 பந்துகளுக்கு 6 பௌண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்களைப் பெற்றார். ப்ரியர் 147 பந்துகளுக்கு 63 ஓட்டங்களை பெற்றார்.

எனினும் இங்கிலாந்து அணி நேற்றைய தினம் தேநீர் இடைவேளைக்குப் பின்னர் 261 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைச் சந்தித்தது. இதன் போது இலங்கை அணியின் வெற்றிக்காகப் பந்து வீச்சில் சிறப்பாக செயற்பட்ட சமிந்த வாஸ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். உலக சாதனை படைத்த முரளி இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தப் போட்டியில் சிறப்பாக செயல்பட்டு இலங்கை அணியின் வெற்றிக்கு வழி வகுத்த குமார் சங்கக்கார ஆட்டநாயகனாகத் தெரிவானார். இரு நாடுகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

**ஆஸி. தலைமைப் பதவி கிளார்க்கிடம்**

நியூசிலாந்துக்கு எதிரான இருபது போட்டிக்கு ஆஸ்திரேலிய அணித் தலைவராக மைக்கல் கிளார்க் தேர்வு செய்யப்பட்டுள்ளார். சேப்பல் ஹெட்லி கிண்ணத்துக்காக ஆஸ்திரேலிய, நியூசிலாந்து அணிகள் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் மோதவுள்ளன. இதற்காக நியூசிலாந்து அணி தற்போது ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளது. இந்நிலையில் இரு நாடுகளும் மோதும் இருபது 20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி பேர்த்தில் நடை பெறவுள்ளது. இதில் ஆஸி. அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் பங்குபெறப் போவதில்லை என அறிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய அணித் தலைமைப் பொறுப்பு மைக்கல் கிளார்க்கிடம் வழங்கப்பட்டுள்ளது. தலைவராக நியமிக்கப்படுவார் என எதிர் பார்க்கப்பட்ட அடம் கில்கிறிஸ்டுக்கு உப தலைமைப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆஸ்திரேலியத் தேர்வுக் குழுத் தலைவர் அன்ட்ரூ ஹில்டிச் கூறுகையில்,



நீண்ட வரலாறு கொண்ட ஆஸ்திரேலிய அணிக்கு எதிர்காலத்திலும் உறுதியான தலைமை தொடர வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு மைக்கல் கிளார்க்கின் தலைமைப் பண்பு மேம்பட வேண்டும் என்பதற்காக அவருக்கு வாய்ப்பு வழங்கியுள்ளோம். 2009 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறவுள்ள இருபது20 உலகக கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு இப்போதே தயாராகத் தொடங்கி விட்டோம்- என்றார்.

டிலான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN

LONDON @ Stratford College
SINGAPORE @ COLUMBIA BUSINESS SCHOOL
MALAYSIA @ KLIUC University College
& to the top universities all over the world

Available Programmes
- BSc - Bachelor of Computer Science
- BBA - Bachelor of Business Administrations
- BA - Bachelor in Hospitality Management
- MSc- Master of Computer Science
- MSc - MSc. in Strategic Business Information Technology
- MSc - MSc. in Mobile Communication
- MBA - Master of Business Administration
- MBH - Master in Public Health
- MEd - Master in Education Management
- MPhil / Phd
- UNIVERSITY OF Wales Lampeter Programme
- BA(Hons) in Business Information Technology
- IMIS & UNIVERSITY HERTFORDSHIRE PROGRAMME
- BSc(Hons) in Computer Science
- IAM & Oxford Brooke University Programme
- BA (Hons) in Strageic Administrative Management
- University of London (External Degree Programmes)
- LLB - Bachelor of Laws
- LLM - Master of Laws
- Engineering Programme
- Medicine

January Intake going on

BIHS
British Institute of Higher Studies International (Pvt) Ltd.
World Class Education
No.15, 1st Floor, 33rd Lane, Wellawatte, Colombo-06.
Tel : 011 2361887, 011 5667299 Fax : 011 5667476
Web : www.bihseducation.com


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை
சிரேஸ்ட ஆசிரியை
கேதீஸ்வரி நாகராசா
அவர்களின் பாசமிகு தந்தை

**சின்னவன் முதலி**

அவர்களின் பிரிவால்

துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்,
கைதடி வடக்கு.

(68809)




Colombo - 0112505633, 0112505632
Jaffna - 021 2226242
Chavakachchery- 021 2227979


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1932 | மறைவு 2006

**திருமதி சண்முகநாதன் சிவபாக்கியம்**

*(மூன்றாம் வட்டாரம், நயினாதீவு)*

திதி:- அமாவாசை (09.12.2007)

எம்மையெல்லாம் ஈன்றெடுத்து
இனிய பலமொழி பேசி
உமையம்மை போலணைத்து
உரமூட்டி வளர்த்தெடுத்து
சுமை தாங்கியாயிருந்து
இமயம் போலுயர்ந்திட்ட
எம் இனிய அம்மா உமைப்
பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம்துயரம்.

தகவல்:
ச.கோகுலராசா *(மகன்)*
*5 ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (68808)

*என்றும் உங்கள் நினைவுடன்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# அனைத்துலக அங்கீகாரம் பெற்ற மலேசிய பட்டப்படிப்புகளுக்கு மகோன்னத நுழைவாயில் மில்லேனியம் கொன்செப்ற் நிறுவனம்!

இன்றைய நிலையில் ஜி.சீ.ஈ. (உ/த) பரீட்சையை முடித்தவர்கள் அப்பால் முன்னேறிச்செல்வதை பற்றியே சிந்திக்கவேண்டும். ஏன்? ஆண்டுதோறும் ஏராளமான மாணவர்கள் பரீட்சையை முடித்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பொருத்தமான தொழில வாய்ப் புக்களை நம்பி எதிர்பார்ப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாத நிலை!

இதனால், உங்கள் தொழில்வாய்ப்புக்கான தகுதிகளைத்தான் அதிகரித்துக்கொள்ளவேண்டும். அதாவது, நீங்கள் ஒரு பட்டப் படிப்பையோ அல்லது வேறு எந்தப் படிப்பையோ மேற்கொண்டு தொழில்வாய்ப்புச் சந்தையில் உங்களை மென்மேலும் மதிப்புள்ளவர்களாக ஆக்கிக்கொள்வதற்கு முயற்சி செய்தல் வேண்டும். க.பொ.த. (உ/த) பரீட்சையுடன் நீங்கள் படிப்பிலிருந்து பின்வாங்கி, எதிர்கால வளங்களையும் வாய்ப்புக்களையும் இழந்தவர்களாக வாழத் தயாரில்லையல்லவா? எனவே, திறன்களை மென்மேலும் பெற்று வாழ்வின் உச்ச நிலைவரை முன்னேற முயலுங்கள்.

### பல்கலைக்கழகங்களிடையிலான கூட்டுச் செயற்பாடு

**MILLENNIUM CONCEPTS** நிறுவனம் மலேசியாவில் எட்டு முன்னணி பல்கழைக்கழகங்கள், கல்லூரிகளுடன் கூட்டு செயற்பாடுகளைக் கொண்டுள்ளது. இதுமட்டுமன்றி மலேசியாவில் கலைமாணி, முதுகலைமாணி பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஒருவர் இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், கனடா போன்ற முன்னணி நாடுகளில் பெறக்கூடிய தகைமைகளையும் நியாயமான கட்டணங்களுடன் பெறக்கூடியதாயிருப்பர்.

மலேசியாவில் கற்கும் ஒருவர் ஏககாலத்தில் இங்கிலாந்தின் **University of East London, Coventry** பல்கலைக்கழகம், **Sunderland** பல்கலைக்கழகம், **Manchester** பல்கலைக்கழகம், **Nottingham** பல்கலைக்கழகம், **Birmingham** பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பட்டங்களையும் பெறமுடியும். இது போன்றே ஆஸ்திரேலியாவின் **University of South Australia, University of Adelaide, RMIT University** ஆகிய பல்கலைக்கழகங்களினதும், ஐக்கிய அமெரிக்காவின் **California State Polytechnical University, Berklee College, Western Michigan University, Troy University** ஆகிய பல்கலைக்கழகங்களினதும், பிரான்சின் Toulouse பல்கலைக்கழகத்தினதும் பட்டங்களையும் பெறமுடியும். இவைகள் மட்டுமன்றி வெளிநாடுகளின் பல்கலைக்கழகங்களின் வெளிவாரி மாணவர்களாகவும் பதிவுசெய்துகொண்டு பட்டம் பெறவும்முடியும்.

வெளிநாடுகளின் மாணவர்கள் மலேசியாவில் தங்கியிருந்தபடியே பட்டப்பின்படிப்புகளை பெறுதல் சாத்தியம்.

### கற்கைநெறிகள்

கணக்கியல், மருத்துவம், வர்த்தக முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், தாதிப் பயிற்சி, வர்த்தக கற்கைகள், மக்கள் தொடர்பாடல், சட்டத்துறை, கணினி கற்கைகள், சுற்றுலாத்துறை, ஹோட்டல் முகாமைத்துவம், விவசாயம், உளவியல், நிதியியல் துறை, அழகுக்கலை, சமையற்கலை, போன்றவற்றில் கற்கைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

### மலேசியாவுக்குள் பிரவேசித்தல்

உயர் கல்வி பெறவரும் மாணவர்களுக்கு 'மாணவர் பாஸ்' வழங்கப்படும். இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னரே இதனை அனுமதிக்கும் கடிதம் குறித்த மாணவருக்கு கிடைக்கப்பெறும். விமானப் பயணம் தொடர்பான விவரங்களை அறிவிப்பதன் பேரில் கல்வி நிறுவனத்தின் பிரதிநிதிகள் விமான நிலையத்தில் வந்து வரவேற்பர். விமான நிலையத்தில் வைத்து விசா அனுமதி வழங்கப்படும். மாணவர்கள் விரும்பும் பட்சத்தில் மலேசியாவில் பகுதிநேர தொழில்களில் ஈடுபடலாம். இதற்கான அனுமதியை குடிவரவு அதிகார சபை வழங்குகிறது.

### மில்லேனியம் கொன்செப்ற் பற்றி

மாணவர்களுக்கு மிக உன்னதமான கல்வி ஆலோசனைச் சேவையை சிங்கப்பூர், மலேசியா, மாலைதீவு, மற்றும் இலங்கையின் கிளை நிறுவனங்கள் மூலம் மிலேனியம் கொன்செப்ற் வழங்கி வருகிறது. எதிர்கால கனவுகள் மற்றும் உங்கள் குறிப்பான தேவைகள் குறித்து தேவையான ஆலோசனைகளை வழங்குகிறது. நிறுவனத்தின் துறைசார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகள் தாராளமாக கிடைக்கிறது. மாணவர்களின் சரியான தெரிவுகளுக்கு பக்கபலமாக மில்லேனியம் கொன்செப்ற் திகழ்கின்றது. மலேசியா, இங்கிலாந்து சிங்கப்பூரின் பல்கலைக்கழகங்களும், நவீன கல்லூரிகள் பலவும் இந்நிறுவனத்துடன் இணைந்து மாணவர்களுக்கு சேவையை வழங்குகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் நூறறுக்கும் அதிகமான மாணவர்களை தேர்ந்தெடுத்து உலகின் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி படர்ந்து பர்ணமித்து வரும் **MILLENNIUM CONCEPTS(PVT) LTD.** ஆலோசனைகளை பொக்கிசமாக கருதுகிறது. கிடைக்கும் பின்னூட்டல்களை கண்டிப்புடன் ஆராய்ந்து செயற்படுகிறது. சுருங்கக்கூறின், அத்தனை இசைவும் இணக்கமும் கொண்டு செயற்படுவதனால் வாடிக்கையாளரின் தேவைகள் முன்னுரிமை பெறுகின்றன.

மில்லேனியம் கொன்செப்றின் சேவைகளை பெறுவதற்கு தொலைபெசி இலக்கங்கள் 2552765, 0773 – 405060, 0714 – 904949 ஆகியவற்றுடன் தொடர்புகொள்ள முடியும்.


*'கற்க கசடற'*

# ஐடியல் அக்கடமி

சண்டிலிப்பாய் | காரைநகர் | யாழ்ப்பாணம்

## மூன்று நிறுவனங்களும் ஒரே நாளில் ஆரம்பம்

## ஆரம்பம்: 10.12.2007

| இடம் / பாடம் | சண்டிலிப்பாய் நண்பகல் 12 மணி | காரைநகர் பிற்பகல் 3 மணி | யாழ்ப்பாணம் காலை 8 மணி |
|---|---|---|---|
| கணிதம் | V.N.பத்மநாதன் .B.குகதாசன் T.ராஜ்மோகன் | V.N.பத்மநாதன் K.நிமலதாசன் | V.N.பத்மநாதன் B.குகதாசன் T.ராஜ்மோகன் |
| விஞ்ஞானம் | A.தபேசன் A.தீபன் | R.திருப்புகழ் | A.தபேசன் V.S.செல்வன் R.முகுந்தன் |
| தமிழ் | N.கணேசமூர்த்தி S.கண்ணன் | P.தமிழ்மாறன் S.கண்ணன் | P.தமிழ்மாறன் A.நவநீதன் |
| குடியுரிமை வரலாறு புவியியல் | R.S.சந்திரன் S.திவா | T.அரங்கநாதன் | K.சுதன் S.திவா |
| ஆங்கிலம் | V.விஜயபாஸ்கரன் S.கிரிதரன் | Y.துஷ்யந்தன் N.வாசுதேவன் | P.மதன் S.கிரிதரன் Y.துஷ்யந்தன் |
| சமயம் | A.குகதாசன் | A.குகதாசன் S.கண்ணன் | S.கவிதரன் |
| வர்த்தகம் | T.சுரேசன் | T.சுரேசன் | T.சுரேசன் |
| சுகாதாரம் | M.முகுந்தன் | S.இராஜமலர் | S.தேவறஞ்சன் |

**ENGLISH MEDIUM**

**தரம் 6, 7, 8**

**எமது ஆசிரியர் குழாம்**

| | |
|---|---|
| MATHS:- | S.KARUNANANTHAN |
| SCIENCE:- | A.THABESAN<br>V.S.SELVAN<br>S.RAJAMALAR |
| HISTORY:- | N.VASUTHEVAN |
| HEALTH SCIENCE:- | S.MOHAN |

**தரம் 10, 11இற்கான ICT**

N.அம்பி
(யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய்)
N.W.வில்லியம்
(காரைநகர்)

கணித ஆசானும் நிர்வாகியும், V.N. பத்மநாதன் (Spl.Trd.Maths).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தென்னிலங்கையின் நீதி வடக்கு, கிழக்கில் வேறா?

இலங்கை ஓர் ஐக்கிய தேசம் என்றும் இந்தத் தீவில் வசிக்கும் எல்லோருக்கும் ஒரே சட்டம் என்றும், இங்கு இன ரீதியாகவோ அல்லது பிரதேச ரீதியாகவோஅல்லது மொழி ரீதியாகவோ பாகுபாடு காட்டப்படுவதில்லை என்றும் தென்னிலங்கை அரசு கூறிவருகின்றது.

ஆனால் ஐம்பது ஆண்டுகளாகக் கொழும்பு அரசு காட்டி வந்த இன ஒடுக்கல் - ஒதுக்கல் - செயற்பாட்டினாலும் இனப்பாகுபாடு, இன அழிப்பு நடவடிக்கையினாலுமே இலங்கைத்தீவில் இனப்பிரச்சினை இந்தளவு தூரம் கோர யுத்தமாகக் குரூர வடிவம் எடுத்தது என்பது உலகறிந்த விவ காரம்.

கடந்த காலத்தில் மட்டுமல்ல, இப்போதும் இந்தப் பாகுபாட்டு நடைமுறை முழு அளவில் செயலுருப்பெறுகின்றது என்பதுதான் உண்மை. அது தொடர்பான மற்றொரு நிகழ்வு அப்பட்டமாக அரங்கேறுகின்றது. ஆனால் சர்வதேச மட்டத்தில் மட்டுமல்ல தேசிய மட்டத்தில் கூட அது அவதானிக்கப்படாமல் - நோக்கப்படாமல் - புறமொதுக்கப்பட்டுச் செல்கிறது என்பதுதான் வேதனைக்குரிய விவகாரமாகும்.

இலங்கை முழுவதும் ஒரு தேசம், இலங்கை முழுவதற்கும் ஒரே சட்டம் என்றுதான் இலங்கை அரசமைப்பிலிருந்து தென்னிலங்கை அரசியல் முறைமை வரை அனைத்தும் கூறுகின்றனர்; அனைவரும் கூறுகின்றனர்.

ஆனால், தென்னிலங்கையில் ஒன்றும் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் இன்னொன்றுமாகத்தான் இந்தத் தீவில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இனப்பாகுபாட்டின் யதார்த்தம் இந்தத் தீவில் அப்படித்தான் அமைந்துள்ளது.

இலங்கையில் மிக உயர்ந்த - மிக உச்ச - அதிகாரம் கொண்ட - மிதமிஞ்சிய நியாயாதிக்கமுடைய ஒரே ஆயம் உயர்நீதிமன்றம்தான். இலங்கை முழுவதற்குமான உயர்நீதிமன்றம் தலைநகர் கொழும்பில் மட்டுமே உள்ளது.

ஆனால் கீழ் நிலை நீதிமன்றங்களான நீதிவான் நீதிமன்றம், ஆரம்பநீதிமன்றம், குடும்பநீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றம், மேல்நீதிமன்றம் போன்றவமை மாவட்டங்கள் தோறும், மாகாணங்கள் தோறும் உள்ளன. ஏன் மேன்முறையீடுகளை பரிசீலிப்பதற்கான மேல் நீதிமன்றங்கள் கூட மாகாண மட்டங்களுக்கு செயற்படவந்துவிட் டன.

எனினும் இலங்கை அரசமைப்பின் கீழ் மிக உயர்ந்த அதிகாரமும் நியாயாதிக்கமும் கொண்ட உயர்நீதிமன்றம் தலைநகர் கொழும்பிலேயே உள்ளது. இலங்கைத் தீவின் எந்த மூலையில் இருக்கும் எந்தப் பிரஜையும் அந்த நீதிமன்றத்திடம் நியாகம் கேட்பதற்குக் கொழும்புக்குத்தான் வர வேண்டும். அதேபோல அந்த உயர்நீதிமன்றத்தின் எந்த உத்தரவும் தீர்ப்பும் இலங்கையின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் செல்லும் என்பதுதான் சட்டப் புத்தகத்தில் உள்ள விடயம். ஆனால் இன ஒதுக்கலுக்கும் பாகுபாட்டுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கும் தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை - தமிழர்களைப் பொறுத்தவரை - அந்த உயர் நீதினமன்றம் வழங்கும் நீதியும் நிாயமும் அந்த மக்களுக்கு மட்டும் செல்லுபடியாகாது என்பதுதான் இங்குள்ள நடைமுறை யதார்த்தமாக உள்ளது.

யாழ்.குடாநாட்டில் படையினரின் நில ஆக்கிரமிப்பால் - கபளீகரத்தால் - தங்கள் வீடு, வாசல்கள், நில புலன்களை இழந்து இடம்பெயர்ந்து பல்லாயிரக்கணக்கானோர் இன்னும் அகதி முகாம்களில் அல்லலுறுகின்றனர். அவர்களின் அவல வாழ்வு சொல்லுந்தரமன்று. அது வார்த்தைகளில் வடிக்கமுடியாதது.

அத்தகைய பாதிக்கப்பட்ட மக்கள் உயர் நீதிமன்றத்தின் வாசற்கதவுகளைத் தட்டி வருடங்கள் கடந்துவிட்டன. படைத்தளபதிகளிடம் கேளுங்கள் அரச அதிபருடன் பேசுங்கள் என்ற வழிகாட்டில்களுடன் விடயம் இழுபடுகின்றதே தவிர, வீடு, வாசல்களை இழந்து அகதிமுகாம்களில் அல்லலுறும் தமிழ் மக்களுக்கு நீதி தேவதையின் பார்வை இன்னும் கிட்டவேயில்லை.

ஆனால் தென்னிலங்கையில் சோதனைச்சாவடியில் வழிமறிக்கப்பட்டு சாரதி அனுமதிப்பத்திரம் கேட்கப்பட்டதற்காக அதை ஆட்சேபித்து தென்னிலங்கை வாசி ஒருவர் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்தபோது என்ன நடந்தது?

அந்த மனுதாரரின் கோரிக்கையும் விண்ணப்பமும் அச்சோதனைச் சாவடியில் பொலீஸார் நடந்துகொண்ட அத்துமீறலுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதேயாகும். சோதனைச் சாவடிகள் வீதிக்குக் குறுக்காக அமைக்கப்பட்டிருப்பது தவறு என்பதல்ல மனுதாரரின் வாதம்.

ஆனால், உயர் நீதிமன்றம் அந்த மனுவில் அதை ஒரு விடயமாக்கி அத்தகைய சோதனைச் சாவடிகளை அமைத்திருப்பது சட்டவிரோதம் என்று உத்தரவிட்டு உனடியாக அவற்றை நீக்கப் பணிப்புரையும் விடுத்தது.

அந்த உத்தரவுப்படி தென்னிலங்கையில் அவ்வாறு அமைக்கப்பட்ட சோதனைச் சாவடிகள் எல்லாம் மறைந்து விட்டன. ஆனால் வடக்கு - கிழக்கில் நிலைமையில் மாற்றம் எதுமே இல்லை.

ஆக -

தமிழர் தாயகத்தில் வீடுகளை விட்டு விரப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி கிட்டவில்லை. ஆனால் தெற்கில் வீதிகளில் போவோருக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது. அது தொடர்பான அவர்களின் உரிமையில் தலையிடக்கூடாது என்றுஉறுதி செய்யும் அளவுக்கு நீதி விரைந்து நாட்டப்படுகிறது.

அந்த நீதிமன்ற உத்தரவு கூட வடக்கு, கிழக்கில் நடைமுறைப்படுத்தப்படவில்லை; யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் செயற்படுத்தப்படவேயில்லை.

தென்னிலங்கை மக்களுக்கு வழங்கப்படும் - உறுதி செய்யப்படும் - நீதி, வடக்கு,கிழக்குத் தமிழர்களுக்கு இல்லை என்பதுதானே இதன் அர்த்தம்....?

உயர் நீதிமன்றம் நேரடியாகத் தலையிட்டுக் கவனிக்க வேண்டிய விவகாரம் இது. வடக்கு, கிழக்கின் - குறிப்பாக யாழ்.குடாநாட்டின் - நீதித்துறையினர் உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டிய விடயம் இது.

நீதி செய்யப்படுவது மட்டுமல்ல, நீதி செய்யப்படுவது செயல் வடிவிலும் வரவேண்டும். ஆனால் இங்கு தமிழர் தாயக மக்களுக்கு நீதி செய்யப்படவே மாட்டாது என்பது அல்லவா வெளிப்படுத்தப்படுகிறது...?

## மாணவர்களின் அடையாள அட்டைகள் யாழ். செயலகத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்குரிய தேசிய அடையாள அட்டைகள் யாழ். செயலகத்துக்குக் கிடைத்துள்ளன.

பாடசாலை அதிபர்கள் செயலகத்தில் சமுகமளித்து அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார். (அ-1)

## துடுப்பாட்ட மத்தியஸ்தரை உள்வாங்கும் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் மத்தியஸ்தர் குழுவால் நடத்தப்படும் மத்தியஸ்தர்களை உள்வாங்கும் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை சமுகமளிக்குமாறு துடுப்பாட்டச் சங்கம் கோரியுள்ளது. (1)

## ஆங்கில டிப்ளோமாதாரிகள் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.9

ஆங்கில டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் முக்கிய கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பட்டப்படிப்பு பற்றிய படிவங்கள் நிரப்ப இருப்பதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## சாவகச்சேரியில் வர்த்தகர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,டிசெ

சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சாவகச்சேரி மருதடி வீதியைச் சேர்ந்த லிங்கம்(வயது 53) என்பவரே தனது வீட்டுக்கு முன்னால் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வீட்டுக்கு அருகில் கடை ஒன்றை நடத்திவந்த அவர் அங்கு சென்றவேளை இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-50-207)

## அமெரிக்க கண்காட்சியில் தங்கப் பதக்கம் வென்ற யாழ்ப்பாணத்துச் சுருட்டு

யாழ்ப்பாணச் சுருட்டுத்தான் உலகிலேயே தரமான சுருட்டு, யாழ்ப்பாணப் புகையிலை உலகின் மற்றெந்தப் புகையிலைகளையும் விட உயர்ந்தது என்று சொன்னால் கேட்பவர்கள் சிரிக்கக்கூடும். ஆனால் அது தான் உண்மை. ஒரு காலத்தில் யாழ்ப்பாணச் சுருட்டு உலகம் முழு வதற்புகும் ஏற்றுமதி செய்யப் பட்டது.

1904 ஆம் ஆண்டு டிசெம்பர் இரண்டாம் வாரத்தில் அமெரிக்காவின் கென்லூயிஸ் தீவில் வர்த்தகக் கண்காட்சியொன்று நடைபெற்றது. இக்கண்காட்சிக்கு எம்.பி. சுவாம்பிள்ளை என்ற வர்த்தகர் யாழ்ப்பாணத்துப் புகையிலையையும் சுருட்டையும் அனுப்பி வைத்தார்.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

கண்காட்சியில் சுவாம்பிள்ளையின் சுருட்டுக்கும் புகையிலைக்கும் தங்கப் பதக்கம் கிடைத்தது. உலகிலேயே யாழ்ப்பாணச் சுருட்டும் புகையிலையும் தான் தரமானசுருட்டும்புகையிலையும் என்பது நிரூபிக்கப்பட்டது. 14.12.1904 அன்று வெளிவந்த 'இந்து சாதனம்' பத்திரிகையில் மேற்படி செய்தி பிரசுரமாகியுள்ளது.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணச் சுருட்டு 'ரின்'னில் அடைக்கப்பட்டு உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்டது. வெள்ளைக்காரப் பிரபுக்கள் பலர் யாழ்ப்பாணச் சுருட்டின் மகிமையைப் பற்றி புலம் பெயர்ந்த யாழ்ப்பாணத்தவர்களுடன் பகிர்ந்துகொண்ட அநுபவங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளன.

ஒரு காலத்தில் பல்லாயிரக் கணக்கான குடும்பங்களுக்கு வாழ்வாளித்த சுருட்டுக் கைத்தொழில் இன்று அழிந்து வருகிறது. சுருட்டுக் கொட்டில்கள் புனரமைக்கப்படுவதுடன் சுருட்டுக் கைத்தொழிலும் நவீன மயப்படுத்தப்பட வேண்டும். யார் அதற்குப் புத்துயிர் தருவார்?

- தாண்டவன் -

# தமிழர்களைக் கொழும்பில்...

ஓங்கி நிற்கிறது; வல்லமையும் வலிமையும் உள்ளதாக ஒலித்தது. ஒலிக்கிறது.

இதே கோத்தபாயதான் சில மாதங்களுக்கு முன் கொழும்பில் இருந்து வடக்கு, கிழக்கு தமிழர்களை வலுக்கட்டாயமாக பஸ்களில் ஏற்றி வவுனியாவுக்கு மூடை கட்டி அனுப்பிய போது உயர்நீதிமன்றத்தால் மூக்குடைக்கப்பட்டார். அன்று ஏற்பட்ட அவமானத்தை எல்லாம் மறந்து விட்டு இப்பொழுது கண் ணில் தென்படும் தமிழர்களை எல்லாம் பூஸாவில் அடைக்க கட்டளையிடுகின்றார்.

இன்று இலங்கையில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எவரையும் அடையாளப்படுத்துவது அரசினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள். அவர்களுடைய வதிவிடத்தை உறுதிப்படுத்துவது கிராம சேவகர் மற்றும் அரசாங்க அதிபர்களினால் முத்திரையிட்ட சான்றுப்பத்திரங்கள் என்பன.

ஆனால் இவை எல்லாவற்றையும் தமது கைகளில் வைத்திருக்கும் போதே தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### அடையாள அட்டையை கேள்விக்குறியாக்கும் அமைச்சர்

இவற்றையும் விட வடபகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து வருபவர்கள் மேற்குறிப்பிட்ட அத்தனை ஆவணங்களுடன் பிரதேச கட்டளையிடும் அதிகாரிகளான இராணுவத்தினரின் அனுமதிகளையும் - பாஸ்களையும் - கிளியரன்ஸுகளையும் பெற்றுக்கொண்டே கொழும்புக்கு வந்தனர்.

அத்தனை இருந்தும் ஏன் கைது செய்தீர்கள் என்று கேட்டால் "இப்பொழுது புலிகளும் அடையாள அட்டைகளைத் தயாரிக்கின்றனர். நீங்கள் வைத்திருப்பது அரசாங்கத்தால் வழங்கப்பட்டதா அல்லது புலிகளால் வழங்கப்பட்டதா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது. எனவே விசாரணைகள் முடியும் வரை அடைத்து வைக்கத்தான் செய்வார்கள்" என்று தேசிய அடையாள அடைகளையே கேள்விக்குறியாக்கிவிட்டார் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

"இவர் தமிழரா, பௌத்தரா, அல்லது ஒரு மனிதரா எதுவுமே இல்லை. தமிழ்ப் பெயரில் நடமாடும் ஜடம் என்று முகத்திற்கு நேராகக் கூறிவிட்டார் மகேஸ்வரன் எம்.பி'.

எவராவது ஒருவர் கைதுசெய்யப்படும்போது, ஏன்? எதற்குக் கைது செய்யப்படுகின்றார் என்ற விவரம் அவரைக் கைதுசெய்வதற்கான கார்ணத்தையும் அறிவிக்கவேண்டும். அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடத்தை உறவினர்களுக்கு அறிவிக்கவேண்டும் என ஐ.நா. பிரகடனம், மனித உரிமைச் சாசனம் என்பன அடித்துக்கூறுகின்றன.

ஏன், சட்டமா அதிபர் கூட இதனை படைத்தரப்பினருக்கு அறிவித்துள்ளார். ஆனால் இவை அனைத்தும் பாதுகாப்பு செயலாளராலும் பாதுகாப்பு தரப்பினராலும் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன.

### பூஸா முகாமில் நரகத்தை நேரில் காணும் தமிழர்கள்

கைதுசெய்யப்பட்டவர்களின் நிலைமை சொற்களால் எழுத முடியாத அளவுக்கு மிகவும் பரிதாபகரமாகியுள்ளது. அடிப்படை வ்சதிகள் இன்றி அடைபட்டு அவலப்படுகின்றார்கள்; அவர்கள் அவதிப்படுகிறார்கள்.

நள்ளிரவில் கைது செய்யப்பட்ட பெண்கள் இரவு உடைகளுடன் மாற்று உடைகள் இன்றி அவதிப்படுகின்றார்கள்.

ஐந்து பேர் கூட நிற்கமுடியாத அறையில் 50 பேருக்கு அதிகமானோர் பூட்டி வைத்து மூன்று நாள்களாகப் பட்டினி போட்டுள்ளனர்.

பின்னர் கொடுத்த உணவில் கல்லும் மண்ணும். அதனை உண்டவர்களுக்கு வாந்தி வயிற்றோட்டம். ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு 4,5 கழிவறைகள் மட்டுமே.

பூஸா முகாமில் நரகத்தை நேரி காண்கிறார்கள். அடிப்படை மனித வசதிகள் எதுவுமின்றி அடிமைகள் போல் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் தவறான விவரங்களை நாடாளுமன்றத்தில் தெரிவித்தனர்.

மூன்று தினங்களாக பாதுகாப்புப் பிரிவினர் நடத்திய தேடுதலின்போது 2594 பேர் கைது செய்யப்பட்டனர். விசாரணையின் பின் 2352 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் 202பேர் மட்டுமே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இதில் 102 பேர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்திய பின் விடுதலை செய்யப்படுவர். எஞ்சிய 100 பேர் புலிகளுடன் நேரடித் தொடர்புடையவர்கள் இதில் ஆக நூறுபேர் மட்டும் கடுமையாக விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறுகின்றனர்.

ஆனால், உண்மை நிலை அதுவல்ல. இவர்கள் கூறுவது அத்தனையும் பொய். இதுவரை ஆக 87 மலையக இளைஞர், யுவதிகள் மட்டுமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் அத்தனை பேரும் இன்றும் சிறைக்கூடங்களிலேயே அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இது தான் உண்மை என்று மகேஸ்வரன் எம்.பி. நாடாளுமன்றத்திலேயே போட்டுடைத்துவிட்டார்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பது அப்பட்டமாகி விட்டது. பிரதமரும் அமைச்சர் ஜெயராஜும் வாயடைத்துப் போய்விட்டனர்.

என்ன போதாத காலமோ குண்டு வெடிப்பின்பின் கைது செய்யப் பட்டவர்களின் பெயர்விவரங்களை நாளை திங்கட்கிழமை உயர்நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ள உயர்நீதிமன்றம், கைது செய்யப்பட்டோர் அனைவரையும் 14ஆம் திகதிக்கு முன் விடுதலை செய்யவேண்டும். இல்லையேல் தடுத்துவைக்கப்பட்டிருப்பதற்கான காரணத்தை உயர் நீதிமன்றத்திற்கு அறிவிக்கவேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் அரசுத் தரப்புக்கு உத்தரவிட்டுள்ளது.

இது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவுக்கு உயர்நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட இரண்டாவது டோஸ். முதலாவதாக தமிழர்களை வடக்கே பலவந்தமாகக் கடத்தியதற்கு. இப்போது தமிழர்களை தெற்கே உள்ள பூஸாவுக்குள் அடைத்ததற்கு.


இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் அரசுக்கு ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன எனலாம். எனவே தமிழர்களின் கைது அரசுக்கு ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு பாதுகாப்புப் பிரிவினால் நிரந்தரமாக அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் அத்தனையும் உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இரவோடு இரவாக அகற்றப்பட்டுள்ளன. இதனால் தலைநகரில் அன்றாடம் இடம்பெற்று வந்த கெடுபிடிகளும் ஓரளவு குறைந்துள்ளன என்றே கூறவேண்டும். *

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 24 | திங்கட்கிழமை 10.12.2007 |
| திதி : பிரதமை | பி.இ. 1.18 |
| நட்சத்திரம் : | கேட்டை பி.ப 01.12 |
| சுபநேரம் | : 12.18 - 05.49 |
| ராகுகாலம் | : 7.49 - 09.19 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ, இந்து வணக்க ஸ்தலங்களில் சுன்னாகம் நகரில் இரவில் கொள்ளை



யாழ்ப்பாணம்,டிசெ.9

இரவு வேளைகளில் - ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள வேளையில் - மக்களின் வீடுகளில் நடைபெற்று வரும் திருட்டுக்கள், கொள்ளைகள் இப்போது இறை சந்நிதிதானங்களுக்கும் பரவி உள்ளன.

சுன்னாகம் நகரப் பகுதியில் கிறிஸ்தவ, இந்து வணக்க ஸ்தலங்களில் கொள்ளையர்கள் தமது கைவரிசையை வெள்ளிக் கிழமை இரவு காட்டியிருக்கிறார்கள்.

சுன்னாகம் அந்தோனியார் தேவாலயத்திலும் அதற்குச் சமீபத்தில் அமைந்திருக்கும் இந்து ஆலயத்திலும் நேற்றுமுன்தினம் இரவு திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன.

அந்தோனியார் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த நற்கருணைப் பேழை திருடப்பட்டுள்ளதுடன் உண்டியலும் உடைக்கப்பட்டு அதிலிருந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

நற்கருணைப் பேழை திருட்டுப் போயுள்ளமையால் தேவாலயத்தில் பூசைகள் செய்த பின்னரே மீளத் திறக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தேவாலயத்தின் கதவுக்கு போடப்பட்ட குறுக்குத்தடியை நீக்கி தேவாலயத்தில் திருடர்கள் நுழைந்து இந்தத் திருட்டை நடத்திவிட்டுச் சென்றுள்ளார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

தேவாலயத்தின் அருட்தந்தை தங்கும் விடுதியின் கதவுகளையும் உடைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுப் பின்னர் கைவிட்டிருப்பதற்கான தடயங்கள் காணப்படுகின்றன.

இதேவேளை சற்றுத் தொலைவில் உள்ள இந்து கோயிலின் - வைரவர் ஆயலத்தின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் மூலஸ்தானத்தில் உள்ள விக்கிரகத்தை புரட்டி அதன் கீழ் வைக்கப்பட்டிருந்த தங்கத்தகடு உட்பட மற்றும் பெறுமதியான பொருள்களையும் திருடிச்சென்றுள்ளார்கள்.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலீஸ் நிலையத்திலும் இராணுவ முகாமிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-68)








## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசுவதற்கு அரசு விரும்ப வில்லை. இதனை விடுதலைப் புலிகள் புரிந்து கொள்ளவேண்டும்.

அரசியல் பேச்சுக்களை நடத்தும் அதேநேரம் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்குத் தொடர்ந்து செயற்படும் என்றார் அவர் (அ-1)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்க அரசுத் தரப்பு முடிவு செய்திருப்பதாக அறியப்பட்டுள்ளது.

இதேவேளை - அரசாங்கம் உடனடியாக நிறுவ உள்ள மாகாண அதிகாரசபைகளில் ஒன்றான கிழக்குச் சபைக்கு பிரபல தமிழ் அரசியல்வாதி ஒருவரே தலைவராக நியமிக்கப்படுவார் என்றும் முஸ்லிம் மற்றும் சிங்களப் பிரமுகர்கள் பிரதித் தலைவர்களாக நியமிக்கப்படுவர் என்றும் கூறப்படுகிறது. (அ)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகியன இணைந்து ஐக்கியநாடுகள் சபைக்கு இக்கோரிக்கையை வலியுறுத்தி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன.

கொழும்பில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து பாதுகாப்புப் படையினர் மேற்காண்ட தேடுதல்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கைதுசெய்யப்பட்டதை சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் மனித உரிமை கள் கண்காணிப்பகம் கண்டிப்பதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச சட்டவிதிகளுக்கு அமைய பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு ஆக்கபூர்வமாக உண்மையான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் எனவும் விடுதலைப் புலிகளோ அரசாங்கமோ உரிமைகளை மீறும் பட்சத்தில் மன்னிக்க முடியாதென அந்த மனித உரிமை அமைப்புகள் மேலும் தெரிவித்தன. (அ-1)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல அமைப்புக்களும் இன்று ஏகோபித்து முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை -

அரசுக்கு ஆதரவு வழங்கும் ஏனைய முஸ்லிம் கட்சிகளுக்கும் இதே கோரிக்கையை அந்த அமைப்புக்கள் விடுத்துள்ளன. (அ-1)

## கம்புறுப்பிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பகுதியில் உள்ள பெற்றோல் நிலையத்துக்கு பெற்றோல் ஏற்றிவந்த பவுஸரில் தீ பரவியதால் பெரும் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

பெற்றோல் நிலையம் முழுமையாக நாசமாகியது. தீ பரவியதால் பதினைந்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களுக் கும் பெரும் சேதம் ஏற்பட்டது. (அ-1)

## மாந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதுங்குழிகளை அழித்ததுடன் தமது நிலைகளைப் பலப்படுத்தியுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பெரியதம்பனைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் மூன்று விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் சடலங்களையும் அவர்களது ஆயுதங்களையும் மீட்டதாகவும் ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (அ-1)


எலைற் கல்வி நிறுவனம்
147, ஃப்ரோ-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கல்வியாண்டு-2008
தரம் 5 முதல் O/Lவரை
புதிய பிரிவுகள் ஆரம்பம்
12.12.2007 புதன்கிழமை
காலை 9 மணி

ஏசியன் அக்கடமி
கேணியடிச் சந்தி
கொக்குவில் மேற்கு
தரம் 01 முதல் O/L வரை
03.12.2007 இல் ஆரம்பமாகிவிட்டது
கிளை: ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி
கொக்குவில் மேற்கில்...
12.12.2007 புதன் காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது
* கற்றோரும் பெற்றோரும் பாராட்டும் ஏசியன் அக்கடமி
* உங்கள் பிள்ளைகளை கற்றோனாக்கும் என்பதில் உறுதி
யாழ். முன்னணி ஆசிரியர் குழு
மேலதிக விவரங்களுக்கு
இயக்குநர்
ஷங்கர் வாமன்
(விஞ்ஞான ஆசிரியர்)
18 வருட சேவை.

SUBRA 14
சித்தங்கேணி
தரம் 2 முதல் O/L வரையான புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன 05.12.2007
★தரம் 2,3,4 விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் குழு
* தரம்5-By கைலைநாதன்
* வாரத்தில் 10 மணிநேரம்
* வாரத்தில் 3 பயிற்சிப் பரீட்சை
* ஒரு பிரிவில் 30 மாணவர்
★கடந்த காலங்களில் புள்ளைப்பரிசில்
* 2004 - 24 சித்தி
* 2005 - 21 சித்தி
* 2006 - 33 சித்தி
* 2007 - 23 சித்தி
★கடந்த 2006, O/L மாணவர்கள் 10A சித்திபெற்றனர் 4 மாணவர்கள்
★இதுவே எமது திறமையின் வெளிப்பாடு
★தரம் 6 முதல் 11 வரை
English Medium
சிங்களம்
புதிய பிரிவு 15.12.2007
காலை 6.15-7.15
Prof லீலாக்கிருஷ்ணன்
வாரத்தில் 3 மணி நேரம்
2008 O/L பரீட்சைக்கான வகுப்பு

ஸ்கந்தா கல்வி நிலையம்
எமது முன்னணி ஆசிரியர் குழாம்
தரம் 3 முதல் O/L வரையான வகுப்புகள்
ஆரம்பம் : 10.12.2007 திங்கட்கிழமை
பி.ப. 3 மணி

| | | |
|---|---|---|
| மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. | தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை. | புதுறோட், காரைநகர் |

நிர்வாகி G.சிறீவரதன்

Group Classes-Science
ஆங்கில மொழி மூலம்-Gr-9,10,11
By. Mr.RAGUMAR
ஆரம்பம் 10.12.2007-6.30 A.M
75, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

BITSMANS
கல்வி நிலையம் மானிப்பாய்.
கல்வியாண்டு 2008
தரம் 1 முதல் O/L வரை
Grade 6,7,8,9,10,11 English Medium Classes
ஆரம்பம் 10.12.2007 திங்கள் 9 a.m

பிறைற்றின் கல்வி நிறுவனம்
சாவகச்சேரி.
தரம் 6-11 வரையான வகுப்புகள்
கல்வியாண்டு 2008
ஆரம்பம் 10.12.2007
திங்கள் காலை 9 மணி

கருத்தரங்கு
A/L 2007, 2008 மாணவர்களுக்குரியது
GIT
S.T.P. COMPUTER WORLD
அனுசரணையுடன்
10.12.2007 Mon 8 - 12
11.12.2007 Tue 8 - 12
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி - யாழ்நகர்

TUTION - MATHS
ENGLISH&TAMIL MEDIUM
40 வருடகாலம் கணிதம் கற்பித்த அனுபவமுள்ள ஆசிரியரால் ENGLISH, தமிழ் மொழி மூலம் ஆண்டு 6 தொடக்கம் O/L 08 வகுப்புக்கள் தனியாகவும் குழுவாகவும் நடத்தப்படும்
தொடர்புகளுக்கு K.Pararajasekaran
8,Fletchers Lane, Chundikuli
T.P.No 9867


## மரண அறிவித்தல்

### சின்னையா சிவநேசன்

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவநேசன் நேற்று(08.12.2007) சனிக்கிழமை காலை விசுவமடுவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா-தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த பொன்னுத்துரை(அமரர்)-மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட மருகனும் குணவதியின் அன்புக் கணவரும் நிறோஜன்(பிரான்ஸ்), சர்மிலன், சர்மிலா(விசுவமடு மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சறோஜினிதேவி(கனடா), இராசநாயகம்(ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டப முகாமையாளர்), காந்திமலர், செல்வநாயகி (உப தபால் அதிபர், அச்சுவேலி கைத்தொழில் பேட்டை) பத்மாவதி, கங்காதேவி(கனடா),வாமதேவன்(அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலசுப்பிரமணியம்(கனடா), பாஸ்கரன் (கனடா), சரஸ்வதி, சரவணபவன்(மந்திகை வைத்தியசாலை பிரதம மருந்தாளர்), சச்சிதானந்தன்(ஜேர்மனி),விமலானந்தன் (ஆய்வு கூட உதவியாளர், யாழ். பல்லைக்கழகம்), நற்குணதேவி, வையந்தி மாலா, சிவானந்தன்(சுவிஸ்), பவளராணி(கனடா), தவமலர் (அமரர்), சரஸ்வதி(கனடா) ஆகியோரின் மைத்துனரும் சிவகாந்தன், சர்வானந்தன்(கனடா), சண்முகதாஸ்(கனடா), சந்தான லக்ஷ்மி, புஸ்பவதி, சாந்தகுமாரி(சுவிஸ்) ஆகியோரின் சகலனும் கதிரேசு(கனடா), காலஞ்சென்ற நடராசா, துரைசிங்கம் (நவிண்டில்) ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னப்புவின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று மு.ப. 10 மணிக்கு விசுவமடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

தகவல்:
சி.இராசநாயகர்
(சகோதரர்)

ஆவரங்கால்,
புத்தூர்.


நாளை ஆரம்பம்
34ஆவது அகவையில்
விக்னா கல்வி நிறுவனம்
கிளை: 417, கே.கே.எஸ்.றோட்.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
தரம் 6 தொடக்கம் O/L வரை
கல்வியாண்டு 2008 ஆரம்பம் 10.12.2007 2மணி
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்க்குழுவினால்

| | | | |
|---|---|---|---|
| Sci | திரு.N.தேவா, திரு.ஜெயவதனன் | Math | திரு.விக்கி, திரு.ரூபன் |
| Eng | திரு.விஸ்வநாதன், திரு.செல்வரட்ணம் | Tam | திரு. தயாபரன், செல்வி.கிருஷ்ணலதா |
| Soci | திரு.பார்த்தீபன், திரு.றொபின்சன் | Reli | திருN.T. தரன், செல்வி.கிருஷ்ணலதா |
| Com | திரு.கம்ஷன் | Geo | திரு. ஆனந்தராஜா |

*அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.
*மாதாந்தப் பரீட்சைகள் நடத்தப்பட்டு புள்ளிகள் றிவேட்ஸ் பதியப்படும்.

SUBRA (14)
Paper Class 2008 A/L

| | | |
|---|---|---|
| Logic | E.S. பவன் | 12.12.2007 காலை 8.00 |
| Tamil | குழந்தைவேல் | Tues - Fri 3 - 4.30 |
| Drama | கணேஸ் | Mon-Wen-Fri-6.15-7.15 |
| Polisci | அசோக் | Sat-Sun- 10 - 12.00 |
| Geo | ஐங்கரன் | Sat-Sun- 7.00 - 9.00 |
| H.Cul | சந்திரன் | Mon-Wed- 4.30-6 |

தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
பிரத்தியேக பரீட்சைகள் நடைபெறும்.
கணக்கீடு
S.S. சீலன்
2009
பங்குடமை
ஆரம்பம் 08.12.2007
பொருளியல்
மீண்டும்
ஜெயக்குமார்
நேரடி
அலுவலகத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.